RE/MAX BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 07 ஏப்ரல் 2023 இதழ்:- 50

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் பயங்கரவாதத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் ஆபத்தானது!

அரசாங்கத்தின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் பயங்கரவாததத்திற்கு கொடுத்துள்ள வரைவிலக்கணத்தை அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும் என இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் என்ற பிரிவில் (3ம்பக்கம் பார்க்க)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

## அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி மீது 34 குற்றச்சாட்டுக்கள் மற்றுமொரு அழகிக்கு பணம் வழங்கியதும் அம்பலமானது!



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது 34 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. 76 வயதான ட்ரம்ப் அவற்றை மறுத்துள்ளார். தன் மீது அரசியல் ரீதியாக தாக்குதல் நடத்தப்படுவதாக ஆதரவாளர்கள் மத்தியில் கூறினார் தமக்கிடையிலான உறவை பகிரங்கப்படுத்தாமலிருக்க ஆபாசப் பட நடிகை (3ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

## ஈழத்தமிழரது மிதவாத அரசியல் கையறு நிலையை நோக்கி நகர்கிறதா?



ஈழத்தமிழர் அரசியல் சூறையாடப்படும் நிலை கண்முன்னே நிகழ்வதை அவதானிக்க முடிகிறது. ஓர் இனத்தின் தேசிய அடையாளம் அதன் வாழ்விடத்தில் தங்கியுள்ளது. வாழ்விடமாகிய நிலம் பறி போகுமாக இருக்குமாயின், அத்தேசிய இனத்தின் அனைத்து அடையாளமும் காணாமல் போய் விடும். காரணம் வாழ்விடமே பண்பாட்டையும் காலாசாரத்தையும் பொருளாதாரத்தையும் அதனோடு கூடிய அரசியலையும் தருகிறது. (9ம் பக்கம் பார்க்க)

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

## உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா 23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை கலைமாமணி ராஜேஸ் வைத்தியாவின் இசைச்சங்கமம்

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




20 Years Real Estate Experience


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Lawrence/ Galloway**

Scarborough $499,900
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals


**Finch & Pharmacy**

Scarborough $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area


**Yonge/Finch**

Toronto $579,000
Bedrooms: 1 Washrooms: 1
Luxurious Bright & Spacious unit

**Bowmanville /Northglen**

Clarington $699,000
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Townhouse

**Eglinton/Markham**

Scarborough $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Low Maintenance Free

**Queens Quay & Lower Sherbourne**

Toronto $874,900
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit

**Steeles/Mclaughlin**

Brampton $1,100,000
Bedrooms: 3 Washrooms: 3
A Quiet Family Neighborhood

**River Street & Highway 12**


Brock $1,350,000
Bedrooms: 5 Washrooms: 4
Walkout Basement

**Meadowvale / 401**

Scarborough $1,998,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Open Concept Layout.

**Sandalwood & Richvale**

Brampton $675,000
Bedrooms: 3 Washrooms: 2
Call for more info

**Eglinton/Sloane**

Toronto $539,000
Bedrooms: 1 Washrooms: 1
Doubble Closet & Open Balcony.

**Danforth & Eglinton Ave**

Toronto $456,500
Bedrooms: 1 Washrooms: 1
Open Concept With Modern Kitchen

**Keele/Sheppard**


Toronto $810,000
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property

**Mccowan & Ellesmere**


Scarborough $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout

**Liverpool & Commerce S**


Pickering $2,700
Bedrooms: 3 Washrooms: 1
Close To Parks

**Birchmount/Ellesmere**



Scarborough $2,400
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி மீது 34 குற்றச்சாட்டுக்கள் மற்றுமொரு அழகிக்கு பணம் வழங்கியதும் அம்பலமானது!





அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது 34 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 76 வயதான ட்ரம்ப் அவற்றை மறுத்துள்ளார். தன் மீது அரசியல் ரீதியாக தாக்குதல் நடத்தப்படுவதாக ஆதரவாளர்கள் மத்தியில் கூறினார் தமக்கிடையிலான உறவை பகிரங்கப்படுத்தாமலிருக்க ஆபாசப் பட நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸஜீக்குப் பணம் கொடுத்தமை தொடர்பில் ட்ரம்ப் மீது குற்றச்சாட்டுகள் கொண்டு வரப்பட்டன.

அவர் வர்த்தகப் பதிவுகளில் மோசடி செய்ததாகவும் அவற்றில் சிலவற்றை வரி தொடர்பில் தவறாகச் சித்திரித்ததாகவும் குற்றச்சாட்டு கூறுகிறது.

நியூயோர்க் நகரில் அவை கடுமையான குற்றச் சாட்டுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. 04 ஏப்ரல் 2023 செவ்வாய்க் கிழமை மன்ஹற்றனில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜராக வந்த ட்ரம்ப்பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவர் மீது 34 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

முன்னதாக ஆபாசப் படநடிகை ஸ்டோர்மி டேனியல்ஸஜீக்கு 130,000 டொலர் வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. குற்றப்பத்திரத்தில், மற்றொரு அழகிக்கு பணம் வழங்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பிளேபோய் மொடல் அழகி கரேன் மெக்டௌகல் என்பவருக்கு 150,000 டொலர் செலுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எந்தவித முன் விசாரணை கட்டுப்பாடுகளும் இல்லாமல் காவலில் இருந்து செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்பட்டார். வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கலாம் என்று நீதிபதி கூறினார்.

2024 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான போட்டிகளும் அப்போது தான் தொடங்கியிருக்கும் நியுயார்க் நகர நீதிமன்றத்திற்கு வந்திருந்த ட்ரம்ப் குற்றச்சாட்டுகளை அமைதியாகக் கேட்டார். அவர் அனைத்துக் குற்றச்

சாட்டுகளையும் மறுத்த பின்பு எந்த நிபந்தனைகளும் இல்லாமல் விடுவிக்கப்பட்டார். ட்ரம்பின் வழக்கறிஞர்கள் அந்தக் குற்றச்சாட்டுகள் ஏமாற்றம் தருவதாகக் கூறினர். கடுமையான போராட்டத்துக்குத் தயார் என்றும் அவர்கள் அறிவித்தனர். நீதிமன்றத்திலிருந்து வெளியேறிய பின் ஊடகங்களிடம் பேசிய ட்ரம்ப், ஜோ பிடன் நிர்வாகத்தை கடுமையாக தாக்கி, அமெரிக்கா நரகத்திற்கு போகிறது என்றும், உலகம் ஏற்கனவே பல காரணங்களுக்காக நாட்டைப் பார்த்து சிரிக்கிறது என்றும் கூறினார்.

எங்கள் தேசத்தை அழிக்க முற்படுபவர்களிடம் இருந்து அச்சமின்றி பாதுகாப்பது தான் நான் செய்த ஒரே குற்றம் என்று டொனால்ட் ட்ரம்ப் செய்தியாளர்களிடம் கூறினார்.

அமெரிக்காவில் இது நடக்கும் என்று நான் ஒரு போதும் நினைக்கவில்லை, என்று டிரம்ப்தனக்கு எதிரான குற்றவியல் குற்றச்சாட்டுகளில் கூறினார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் பயங்கரவாதத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் ஆபத்தானது!

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் என்ற பிரிவில் பயங்கரவாதத்திற்கு கொடுத்துள்ள வரைவிலக்கணத்தை அரசாங்கம் மீளாய்வு செய்யவேண்டும் என மனிதஉரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பயங்கரவாதத்திற்கான வரைவிலக்கணம் நீண்ட காலமாகவே சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வந்துள்ளது என தெரிவித்துள்ள மனித உரிமை ஆணைக்குழு இந்த வரைவிலணக்கத்தின் பரந்துபட்ட நோக்கம் இந்த விடயத்தை சிக்கலாக்குகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

இந்த சட்டமூலத்தில் பயங்கரவாதத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் அபிப்பிராயபேதத்தினை வெளிப்படுத்தும் நியாயபூர்வமான செயற்பாடுகளிற்கும் பயங்கரவாத செயற்பாடுகளிற்கும் இடையில் வித்தியாசம் காண்பதை கடினமானதாக்கியுள்ளது எனவும் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இணங்காதிருப்பவர்கள் சிவில் சமூகத்தினரை இலக்கு வைப்பதற்காக அரசாங்கம் பயங்கரவாதம் குறித்த பரந்துபட்ட வரைவிலக்கணத்தை பயன்படுத்தக்கூடும் என மனித உரிமை ஆணைக்குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

இது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமையை மீறுகின்றது எனவும் தெரிவித்துள்ள இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு சுதந்திரமான பேச்சிற்கான உரிமையும் மீறப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதம் குறித்த வரைவிலக்கணம் பேச்சுசுதந்திரம் நடமாட்ட சுதந்திரம் ஆகியவற்றின் மீது கடும் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும் எனவும் தெரிவித்துள்ள மனித உரிமை ஆணைக்குழு பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக பொதுநலன்கள் குறித்த விடயங்களில் மக்கள் வெளிப்படையாக கருத்து கூற தயங்குவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதனை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். பல தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கடந்த மார்ச் 22ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானியில் வெளியானது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ஒழித்துஇ அதற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு எதிர்கட்சிகள் சட்டத்தரணிகள் சங்கம் சிவில் அமைப்புகள் என பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றனர் என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# WORK WITH THE BEST TEAM GET YOUR HOME SOLD!

#1 HOMELIFE TEAM IN ONTARIO

SIVA & JOY

KNOWLEDGE • EXPERIENCE • SUCCESS

## ASSIGNMENT SALE
### PINNACLE TORONTO EAST CONDOS




$589,900






- 1 Bedroom+Den
- 1 Bathroom
- 651 Sq Ft
- 1 Parking+ 1 Locker

## ASSIGNMENT SALE
### THE LANDING CONDOS



**Whitby**
Victoria St W/Brock St S

- 2 Bedroom+Den
- 2 Bathroom
- 854Sq Ft
- 1 Parking+ 1 Locker




**$760,000**
Occupancy September 25 2023

- ✔ Exciting opportunity to live near Whitby's waterfront
- ✔ Chance to live in a beautifully scaled condominium located by the lake
- ✔ Only a 3-minute stroll to the Whitby GO Station
- ✔ Quick access to Highway 401 and 412 allowing for easy commutes


# UNION CITY in MARKHAM




### DEPOSIT STRUCTURE
$10,000 at Signing
Balance to 5% in 30 Days
5% on April 1, 2024
2.5% on October 1,2024
2.5% on April 1, 2025
5% on Occupancy



## FROM MID $400S




Minutes away from CF Markville Mall
Highway 404 just 4 minutes away
Highway 407 just 2 minutes away
Just steps away from Unionville GO Station
Close to York University Markham Campus





**SASIKUMAR SHANMUGANATHAN**
BROKER

**SIVA SHANMUGANATHAN**
BROKER

**JOY SELVANAYAGAM**
BROKER

**416.709.5000** **416.545.7482**

**www.futuregtahomes.com**

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife/Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated

Bus: 905.201.9977

# கருநாட்டுக்கேணி தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் அமைக்க முயற்சி!

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் ஒன்றான கருநாட்டுக்கேணியிலுள்ள தமிழ் மக்களின் காணிகளை அபகரித்துச் சிங்களக் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கருநாட்டுக்கேணிப் பகுதியில் பொலிஸ் நிலையத்தைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய காணிகளே இவ்வாறு அபகரிக்கப்பட்டுிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் கீர்த்தி தென்னக்கோனின் வழிகாட்டலில், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினாலேயே இந்த சிங்களக் குடியேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் அவ்வாறு சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை பார்வையிடுவதற்கு, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், கரைதுறைப்பற்று பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் 03 ஏப்ரல் 2023 கருநாட்டுக்கேணிப் பகுதிக்கு சென்றனர்.

இந் நிலையில் குறித்த ஆக்கிரமிப்புச் செயற்பாட்டுக்கு முன்னாள் வடக்கு மாகாணசபை துரைராசா ரவிகரன் மற்றும், காணிகளுக்குரிய தமிழ் மக்கள் ஆகியோர் இணைந்து தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

கடந்த 1973, 1979ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் தமக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்ட இந்தக் காணிகளில் தாம் குடியிருந்ததுடன், பயிர்ச்செய்கை



களிலும் ஈடுபட்டு வந்ததாகவும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

தமது பூர்வீகமான இக்காணிகளில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு தாம் ஒருபோதும் இடமளிக்க முடியாதெனவும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தெரிவித்தனர். மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நீர்ப்பாசன வயல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வெலிஓயா பகுதி சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், தமிழ் மக்களுக்குச் சொந்தமான மானாவாரி விவசாய நிலங்கள் பலவும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் தற்போது தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளையும் அபகரிப்புச் செய்து அங்கு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வெடுக்குநாறிமலை சென்ற அமைச்சர்கள் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்ய மறுப்பு



வெடுக்குநாறிமலையில் உடைத்து எறியப்பட்ட விக்கிரகங்கள் புதிதாக 02 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை பிரதிஷ்டை செய்வேன் என்று உறுதியளித்த அமைச்சர் ஜீவன்தொண்டமானும் டக்ளஸ் தேவானந்தாவும் அதிலிருந்து பின்வாங்கியுள்ளனர்.

02 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை வெடுக்குநாறி மலைக்கு சென்று அங்குள்ள நிலைமையை அவதானித்து மத வழிபாடுகளிலும் ஈடுபட்ட இருவரும் நீதிமன்றில் வழக்கு இருப்பதால் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வது தொடர்பாக பின்னர் தீர்மானிப்போம் என்று கூறியுள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் உடைத்து எறியப்பட்டன. இது இந்துக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது தொடர்பாக கடும் கண்டனங்கள் எழுந்த நிலையில், பல தரப்பினரின் கவனத்துக்கும் சென்றது.

இந்த நிலையில், அமைச்சர் ஜீவன் தொண்டமான் அடுத்த ஞாயிற்றுக்கிழமை (02 ஏப்ரல் 2023) வெடுக்கு நாறிமலைக்கு சென்று சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்வேன் என்று கூறியிருந்தார்.

இதேபோன்று உடைக்கப்பட்ட விக்கிரகங் கள் மீளவும் பிரதிஷ்டை செய்யப்படும் என்று கிளிநொச்சியில் வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருந்தார். இதனிடையே, 02 ஏப்ரல் 2023 ஞாயிறு அதிகாலை ஒரு மணி தொடக்கம் நான்கு மணிவரையான நேரத்துக்குள் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்ய ஆலய நிர்வாகம் முயன்றது. ஆனால், இதற்கு தொல்பொருள் திணைக்களம் தடை விதித்தது. அத்துடன், இந்தப் பணியை முன்னெடுக்க முயன்ற மூவரை பொலிஸார் கைது செய்து பின்னர் விடுவித்திருந்தனர்.

இந்த நிலையில், அமைச்சர்களின் வருகைக்காக அப்பகுதியினரும் ஆலய நிர்வாகமும் காத்திருந்தது. அமைச்சர்கள் இருவரும் பாராளுமன்ற உறுப்பினர்களான கு. திலீபன், ம.ராமேஸ்வரன் ஆகியோர் எனத் தமதுபரிவாரங்களுடன் அங்கு சென்றிருந்தனர்.

அங்கு நிலைமைகளை கண்காணித்த அவர்கள், நீதிமன்றில் வழக்கு நிலுவையில் இருப்பதால் தற்போது விக்கிரகங்களை வைக்க முடியாது என்று கூறினர். அத்துடன், எதிர்வரும் 10ஆம் திகதிக்கு பின்னர் இது தொடர்பாக கலந்துரையாடி முடிவு எடுக்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

அவர்களின் இந்தப் பதிலால் ஆலய நிர்வாகத்தினரும் மக்களும் அதிருப்தியடைந்தனர். அவர்களிடையே கோபமும் குழப்பமும் ஏற்பட்டது. இந்த நிலையில், நீங்கள் சிலைகளை வைப்போம் என்று அறிக்கை விட்டபோது நீதிமன்றில் வழக்கு இருப்பது தெரியவில்லையா என்று கேள்விகளை எழுப்பினர். ஆனால், அமைச்சர்கள் இதற்கு பதிலளிக்காது அங்கிருந்து சென்று விட்டனர்.

# தம்பாட்டியில் கடற்படைக்கு காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்பு!

ஊர்காவற்துறை தம்பாட்டி பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்படும் காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து 04 ஏப்ரல் 2023 நாரந்தனை வடக்கு தம்பாட்டியில் உள்ள இறங்கு துறையில் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஊர்காவற்துறை மீனவர்களுக்கு சொந்தமான தம்பாட்டி இறங்குதுறைக்கு அண்மையில் உள்ள பகுதியில் கடற்படையினரால் சோதனைச்சாவடி அமைக்கப்பட்டிருந்த நிலையில், இதனை அகற்றுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் குறித்த அரச காணியிலிருந்து கடற்படையினர் வெளியேறாத நிலையில், நில அளவை திணைக்களத்தினர் அந்த காணியை அளந்து கடற்படையினருக்கு வழங்குவதற்காக அங்கு செல்லவுள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்களால் காலை 8.00 மணியளவில் தம்பாட்டி இறங்குதுறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை திருகோணமலை குச்சவெளி பொன்மாலைக் குடா பகுதியில் பௌத்த மதகுருக்களால் சிறுபான்மை இன மக்களின் காணிக்குள் அத்துமீறி அடாத்தாக புத்தர் சிலை வைக்க முற்பட்ட போது அமளிதுமளி நிலவியுள்ளது. குறித்த காணிக்குள் பௌத்த மதகுரு தனது மெய்ப்பாதுகாவலருடன் சென்றிருந்த வேளையில், பொது மக்களை மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் செய்துள்ளார். புல்மோட்டை அரிசி மலை விகாரையினைச் சேர்ந்த பௌத்த மதகுருவே இவ்வாறான சண்டித்தன வாய்த்தகராறில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஜனாதிபதி ரணிலின் இருமுனை வியூகம்?

ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து நகர்கின்றார். இரு முனை வியூகங்களில் அவர் ஈடுபடுகிறார் என்று தெரிகின்றது.

ஒன்று, உள்நாட்டுக்குள் தனக்கான ஆதரவுத் தரப்புகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றார்.அடுத்ததாக, இலங்கைத்தீவின் உள்விவகாரங்களில் கரிசனையுள்ள வெளித் தரப்புகளுடன் உறவுகளை பலப்படுத்தி வருகின்றார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான், ரணில் விரைவில் புதுடில்லி பயணமாகவுள்ளார். இது தொடர்பில் முன்னைய தலையங்கங்களிலும் நாம் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

ரணிலின் புதுடில்லி பயணத்தின் போது அவர் நிச்சயம் 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தை முன்வைப்பார். ரணில் விக்கிரமசிங்க ஒரு சாணக்கிய அரசியல்வாதி. அவர் இந்தியாவின் ஆர்வங்களை நன்கறிவார்.

அதேவேளை, இலங்கைத் தீவின் மனித உரிமைகள் விவகாரத்தில் அழுத்தங்களை பிரயோகித்து வரும் அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் எல்லையையும் நன்கறிவார். அமெரிக்கா தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் நேரடியாக தலையீடு செய்யப் போவ தில்லை. அமெரிக்காவின் ஈடுபாடு உலகளாவிய செல்வாக்கு தொடர்பானது. இலங்கையில் எவ்வாறான தோர் அரசியல் கட்டமைப்பு மாற்றம் ஏற்பட வேண்டு மென்று அமெரிக்கா வற்புறுத்தப் போவதில்லை.

அதே வேளை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் ஒரேயொரு நாடான இந்தியாவின் எல்லையென்பது இந்திய இலங்கை ஒப்பந்தம் மட்டுமே! இந்த அடிப்படையில் தான் இந்தியா தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அழுத்தி வருகின்றது.

இந்தியா 13இற்கு அப்பால் பேச வேண்டுமென்பது தமிழர் தரப்புக்களின் ஆசையாக இருந்தாலும் அது நடைமுறைக்கு சாத்தியமான ஒன்றல்ல. இந்த விடயங்கள் அனைத்தையும் ரணில் நன்கறிவார்.

அதேவேளை புதிய அரசியல் யாப்பு விடயமொன்றில் ஈடுபட்டு விரல்களை சுட்டுக்கொண்ட அனுபவத்தையும் ரணில் கொண்டிருக்கின்றார். ரணில் மைத்திரி ஆட்சிக்காலத்தில், அரசாங்கத்தின் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் புதிய அரசியல் யாப்பு விடயமும் ஒன்று. இன்னும் சில காரணிகளுமுண்டு.

இந்த விடயங்களைத் துல்லியமாகக் கணித்தே தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தை, ரணில் அரசியல் அரங்குக்கு கொண்டுவந்தார்.

13ஆவது திருத்தம் தொடர்பில் பேசினால் அது தென்னிலங்கையில் எவ்வாறான அதிர்வலைகளை ஏற்படுத்துமென்று தெரிந்தே ரணில் அதனை உச்சரித்தார். எதிர்பார்த்தவாறே, பௌத்த பிக்குகள் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரதியை எரித்து, தங்களின் எதிர்ப்புகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

அரசமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தையே அமுல்படுத்துவதில் பெரும் சவால்கள் இருக்கின்ற போது அதனைத் தாண்டி எவ்வாறு பயணிப்பது என்னும் கேள்வியுடன் தான் இந்திய மற்றும் அனைத்துலக சமூகத்தை ரணில் எதிர்கொள்ளுவார்.

இலங்கைத் தீவில் அமைதியை இந்தியா விரும்புகின்றது. சில விடயங்களை கடுமையாக அழுத்தினால் அமைதி சீர்குலையுமென்று கருதினால் அனைவருமே அமைதியாகி விடுவர்.

இந்த நிலையில் தமிழர் விவகாரம் இரண்டாம் பட்சமானதொரு விடயமாகிவிடும். ஏனெனில், தமிழர்களால் இலங்கையின் சமநிலையை குலைக்க முடியாது. அதற்கான வலு தமிழர்களிடமில்லை. இந்த நிலையில், சிங்களவர்களை அதிகம் குழப்பமடையச் செய்யும் நடவடிக்கைகளில் வெளித்தரப்புக்கள் எச்சரிக்கையுடனேயே இருக்கும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அரசியலமைப்பில் இருக்கின்ற ஏற்பாடுகளை அமுல்படுத்துவதன் மூலம் பிரச்னைகளை தீர்ப்பதற்கான பொறிமுறையொன்று தொடர்பிலேயே ரணில் கவனம் செலுத்துவார்.

இந்த விடயத்தில் தமிழரின் எதிர்ப்பு ஒரு பொருட்டாக வெளித் தரப்புகளால் கருத்தில் கொள்ளப்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. ஏனெனில், தமிழர்களின் அரசியல் என்பதே வெளித் தரப்புக்களை நம்பித்தான் இருக்கின்றது. வெளித்தரப்புக்களை அதிகம் விரோதித்துக் கொண்டால், அதனாலும் தமிழர்களே பாதிக்கப்படுவர்.

# கடும் இனவாதியான புத்த சாசனம் அமைச்சர் காணி சுவீகரிப்பை நிறுத்தா விட்டால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் முடங்கும்!

தொல்பொருள் திணைக்களத்தை முன்னிலைப்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் பூர்வீக காணிகள் சுபீகரிக்கப்படுகின்றன. இனவாத செயற்பாடுகளை நிறுத்தாவிட்டால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை முடக்குவோம், இனவாத அமைச்சர்கள் தமிழ் மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலைமையை தோற்றுவிப்போம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் 04 ஏப்ரல் 2023 செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் வாய்மூல விடைக்கான வினாக்களின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அமைச்சரே1 புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவை நோக்கி நீங்கள் ஒரு இனவாதி கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டம் குசலானமலைக்கு வந்த போது மக்கள் உங்களை விரட்டியடித்தார்கள், அதனால் தான் குசனாலமலையில் இன்று சைவ மத வழிபாடுகள் இடம்பெறுகிறது.

தொல்பொருள் திணைக்களத்தை முன்னிலைப்படுத்தி நாட்டில் மீண்டும் பிரச்சினைகளை தோற்றுவிக்கும் செயற்பாடுகள் மாத்திரம் முன்னெடுக்கப்படுகிறது.



வவுனியாவில் வெடுக்குநாறியில் பிரச்சினை, குறுந்தூர் மலையில் பிரச்சினை, குசலானமலையில் பிரச்சினை தற்போது திருகோணமலை அரிசிமலையில் பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகிறது. தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம், தொல்பொருள் மரபுரிமைகளை பாதுகாக்க வேண்டுமாயின் சர்வதேச மட்டத்தில் தொல்பொருள் நிபுணத்துவம் வாய்ந்த தரப்பினரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளுங்கள் அதனை விடுத்து ஏன் பௌத்த பிக்குகளை முன்னிலைப்படுத்தி தொல்பொருள் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றீர்கள்.

தொல்பொருள் ஜனாதிபதி செயலணி ஊடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் எமது மக்களின் பூர்வீக காணிகள் சுவீகரிக்கப்படுகிறது. ஒரு சில அமைச்சர்கள் இனவாத செயற்பாடுகளுக்காகவே தொல்பொருள் திணைக்களத்தை பயன்படுத்திக் கொள்கிறார்கள். எமது மக்களின் உரிமைகளை பறிக்கும் வகையில் தொல்பொருள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகளை நிறுத்தாவிட்டால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை முடக்குவோம்.

இனவாத அமைச்சர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வர முடியாத அளவுக்கு செயற்படுவோம். நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியிலும் தொல்பொருள் திணைக்களத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இனவாதம் முடிவுக்கு வந்தால் மாத்திரமே முன்னேற்றமடைய முடியும் என்றார். இதன்போது எழுந்து உரையாற்றிய புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஒருவர் எமக்கு பரிசொன்றை வழங்கினால் அதனை நாம் ஏற்காவிட்டால், அந்த பரிசு உரிய தரப்பினருக்கு சொந்தமாகும் என்றார்.

## வடக்கு மாகாண ஆளுநரின் உத்தரவுக்கு தடை!

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இருந்து, யாழ்ப்பாணம் மாநகர சபையை வெளியேற வடக்கு மாகாண ஆளுநர், பணித்தமைக்கு எதிராக, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம், இடைக்கால கட்டளை விதித்துள்ளது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில், வழக்கு 03 ஏப்ரல் 2023 விசாரணைக்காக எடுக்கப்பட்ட போது, நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ். மாநகர சபையை நாவலர் கலாசார மண்டபத்தில் இருந்து வெளியேற பணித்ததுடன் அதனை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளித்துள்ளார். இதற்கு எதிராக, யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் தாக்கல் செய்த வழக்கில், யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் ஆஜராகியிருந்த போது, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம், இந்த இடைக்காலக் கட்டளையை பிறப்பித்



துள்ளது. வழக்கு, எதிர்வரும் 26 ஆம் திகதி, மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# தமிழர்களின் வரலாற்றை அழிப்பதற்கே பாரம்பரிய வழிபாட்டிடங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன

இந்த நாட்டில் தமிழர்களின் வரலாற்றை முற்றாக துடைத்தெறிவதற்கான ஆரம்பமே அவர்களின் பாரம்பரிய வழிபாட்டிடங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள். சைவர்கள் வேறு எந்த மதத்தினருக்கும் உரித்தான இடங்களையோ வழிபாட்டிடங்களையோ இது வரை ஆக்கிரமித்ததில்லை.

ஆனால் இன்று சைவர்களின் பாரம்பரிய ஆலயங்கள், வரலாற்று தொன்மங்கள் சிங்கள பௌத்தர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. இதை எம்மால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. இந்நாடு மேலும் சாபங்களுக்குள்ளாகி அழிவையும் துயரையும் நோக்கி போவதற்கு இவ்வாறான செயற்பாடுகளே காரணம் என இலங்கை சிவபூமி அறக்கட்டளை தலைவரும் தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவரும் சமூகசேவகரும் உலக றிந்த சமய சொற்பொழிவாளருமான செஞ்சோற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கூறுகிறார். குருந்தூர் மலை விவகாரம், கீரிமலை ஆதி சிவன் ஆலயம் அழிக்கப்பட்டமை மற்றும் இலங்கையில் சைவ வழிபாட்டிடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் அவர் வழங்கிய நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

கேள்வி: இலங்கையில் போருக்கு பின்னரும் தமிழர் வாழ்விடங்கள் ,வரலாற்று வழிபாட்டிடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருவது குறித்து?

பதில்: ஈழத்திருநாட்டில் ஆதி சமயங்களில் சைவம் மிக முக்கியமானது. பௌத்தம் எந்தளவுக்கு முக்கியமானது என தென்னிலங்கையில் குறிப்பிடுகின்றார்களோ அதே போன்று சைவமானது நாட்டின் வடக்கு கிழக்கு மாத்திரமின்றி நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கோலோச்சிய நெறியாகும்.

1500 களில் போர்த்துகேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்பே நாட்டின் அனைத்து பகுதிகளிலும் குறிப்பாக கரையோரப் பகுதிகளில் சைவ ஆலயங்களே இருந்தன. இதை சிங்கள பேராசிரியர்களும் தமது வரலாற்று நூல்களில் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

அவற்றில் பல அந்நியர் ஆட்சியில் அழிந்தன. சில ஆலயங்கள் இருந்த இடம் தெரியவில்லை. பல ஆலயங்கள் மீண்டும் அதே இடத்தில் புனர்நிர்மாணம் பெற்றன. காலியில் இருந்த சிவன் ஆலயம் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கியது. அது இருந்த இடம் தெரியவில்லை. இப்படி பல ஆலயங்களை கூறலாம். இந்நிலையில் யுத்தம் இடம் பெற்ற முப்பது வருடங்களில் தமிழர்களின் பகுதிகளை ஆக்கிரமித்திருந்த இராணுவத்தினர் மூன்று விடங்களை முன்னெடுத்தனர்.

தமிழர்களின் பாரம்பரிய இடங்களை அழித்தல் அவர்களின் பாரம்பரிய வழிபாட்டிடங்களை தொல்லியல் என்ற பெயரில் பௌத்த புராதன இடங்களாக மாற்றுதல் இதன் மூலம் சைவத்தையும் தமிழர்களையும் வலுவிழக்கச் செய்தல் இப்போது மக்கள் நட மாட்டமே இல்லாத இடங்களில் புத்தர் சிலைகளை கொண்டு வந்து வைக்கின்றனர். இது வேதனையான விடயம். ஏனென்றால் பௌத்தத்துக்கும் சைவத்துக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. தமிழர்களும் பௌத்த மதத்தை தழுவியவர்களாக இருந்திருக்கின்றனர்.

இது சிங்கள பௌத்தர்களுக்கு விளங்கவில்லை. போருக்குப் பின்னரும் இந்த ஆக்கிரமிப்புகளும் அநியாயங்களும் தொடர்கின்றன என்றால் இந்நாட்டில் ஆதி இனம், ஆதி நெறியை கண்டு இவர்கள் பயப்படுகின்றார்கள் என்பது தான் அர்த்தம்.

கேள்வி: தமிழர்கள் மற்றும் சைவநெறிக்கு எதிரான இந்த ஆக்கிரமிப்புக்கு என்ன காரணம்?

பதில்: பேரினவாத சிந்தனைகளைத் தவிர வேறு ஒன்றுமில்லை. தமிழர்களின் கல்வி




சுதந்திரம் பறிக்கப்பட்ட போது தான் இளைஞர்கள் ஆயும் ஏந்தினார்கள். பின்னர் எமது தாயக மண்ணை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் தாராளமாக இடம் பெற்றன. இப்போது எமது சமயத்தின் மீது கை வைத்துள்ளனர்.

இந்த செயற்பாடுகள் நாட்டுக்கு கேடு விளைவிக்கும். பௌத்தத்திலும் சைவத்திலும் அறம் தர்மம் பற்றி பேசப்படுகின்றன. இவற்றுக்கு மாறாக நாம் எதை செய்தாலும் அது அழிவையே எமக்கு தரும். இன்று எமது நாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். போர் முடிவுற்றும் கூட எமது நாடு பல நாடுகளிடம் அடகு வைக்கப்பட்டுள்ளது.

எந்த நேரமும் எமது நாட்டை ஆபத்துகள் சூழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. பொருளாதார வலு குன்றிய நாடாக நாம் இருப்பதால், யாரிடம் நாடு அதிகமாக கடன் பெற்றிருக்கின்றதோ அந்நாடு இலங்கையை எப்போதும் ஆக்கிரமிக்கலாம். அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என இவர்கள் சிந்தித்திருந்தால் இந்த சர்ச்சைகள், பிரச்சினைகள் இடம் பெற்றிருக்காது.

கதிர்காமல் ஒரு காலத்தில் சைவர்களின் ஆலயமாக இருந்தது. இன்று அது முழுமையாக பௌத்த இடமாக மாறி விட்டது. ஆனாலும் இருசாராரும் ஒற்றுமையாக வழிபடுகின்றனர். சைவர்களுடைய இந்த பக்குவம் பௌத்த மதத்தினருக்கு இல்லை.

கேள்வி: பௌத்த மத பிக்குகளினால் கூட ஏன் இந்த தெளிவை பெற முடியாதுள்ளது?

பதில்: நாம் பௌத்தத்துக்கோ வேறு எந்த மதத்துக்கோ எதிரானவர்கள் இல்லை. இதை ஏனைய மதத்தவர்களும் அறிவர். ஆனால் ஏனைய அனைத்து மதத்தவர்களும் சைவர்களுடன் முரண்படுகின்றனர். இடங்களை ஆக்கிரமிக்கின்றனர். பௌத்த துறவிகள் தமது சமயத்தை விளங்கிக்கொள்ளாமல் சைவ ஆலயங்களுக்குச் சென்று குழப்பம் விளைவிக்கின்றனர். முன்னேஸ்வரம், கேதீச்சரம், கோணேஸ்வரம் ஆகிய இடங்களுக்குச் சென்று முரண்படுகின்றனர். ஆனால் இன்று சைவ சமயத்துக்கு வந்துள்ள ஆபத்து பௌத்த துறவிகளால் மட்டும் ஏற்பட்டு விடவில்லை. கிறிஸ்தவர்களாலும் இஸ்லாமியர்களாலும் ஆபத்து வந்துள்ளது.

இவர்கள் முப்பது வருட கால போரை பயன்படுத்தி, பிற நாடுகளிலுள்ள மத நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று, சிறுவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கின்றோம் என்ற பெயரில் மதம் மாற்றியுள்ளனர். பின்னர் அவர்களின் உறவினர்களை மாற்றினர். இந்த 21ஆம் நூற்றாண்டிலும் பொருளை கொடுத்து மதம் மாற்றும் பணியை இவர்கள் செய்கின்றனர். இது சமயப் பணியா?

இன்று பல பெயர்களின் வட பகுதிகளில் கிறிஸ்தவ சபைகள் உருவாகியுள்ளன. இவர்களிடம் தாராளமாக பணமும் வாகனங்களும் இருக்கின்றன.

இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறோம், வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டாம் என்றெல்லாம் கூறி அப்பாவி மக்களை ஏமாற்றுகின்றனர். பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரம் அமைந்துள்ள பிரதேசம் ஆதி சைவர்களின் பூமி. போர்த்துகேயர் ,ஒல்லாந்தர் வருவதற்கு முன்னர் இங்கு சைவர்களே வாழ்ந்தனர்.

ஆனால் இன்று அப்பிரதேசத்தை ஒரு மறை மாவட்டம் என அறிவித்து அங்கு சைவர்களின் எந்த அடையாளமும் இருக்கக் கூடாது என்ற மனநிலையில் கத்தோலிக்க மதகுருமார்கள் செயற்படுகின்றனர். கத்தோலிக்கர்களின் ஆலயம் இருப்பது மடுவில். அங்கு சைவர்களும் செல்வர்.

ஆனால் பாலாவி தீர்த்தக்கரையில் அமைந்துள்ள திருக்கேச்சரத்துக்கு வந்து அவர்கள் கத்தோலிக்க ஆலயம் ஒன்றை அமைத்துள்ளனர். இங்கு



கத்தோலிக்க மக்களே இல்லை. அது மட்டுமா? இங்குள்ள சைவர்களுக்கு பல விதத்திலும் மனஉளைச்சல்களை ஏற்படுத்தி முரண்பாடுகளை உருவாக்கினர்.

சிவராத்ரிக்கு அமைக்கப்பட்ட நுழைவு வளைவை ஒரு பாதிரியார் தலைமையில் உடைத்தெறிந்தார்கள். போர்த்துகேயர் ஒல்லாந்தர் வருவதற்கு முன்பு இங்கு வாழ்ந்த சைவர்களில் ஒரு சிலரே பின்பு தமது தேவைக்காக மதம் மாறி பெயர்களை மாற்றிக்கொண்டு இங்கு கத்தோலிக்கர்களாக வாழ்ந்து வருகின்றனர் என்பது தான் உண்மை. அவர்களின் பூர்விகம் மற்றும் மூதாதையர்களின் பெயர்களை பார்த்தால் இது விளங்கும்.

இந்த உண்மைகள் தெரிந்தும் மத குருமார்கள் இவ்வாறு செயற்படுவது வேதனைக்குரியது. இவ்வாறு நடந்து கொள்ளும் இவர்கள் எவ்வாறு தமது மக்களுக்கு நல்ல விடயங்களை போதனை செய்ய முடியும்? இப்போது பல மத நிறுவனங்கள் நாட்டில் சர்வதேச பாடசாலைகளை ஆரம்பித்து அங்கும் மத மாற்றங்களை ஆரம்பித்துள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள சகல சர்வதேச பாடசாலைகளின் உரிமையாளர்களும் கத்தோலிக்கர்களே.

இங்கு சைவ பிள்ளைகள் அதிகமாக படிக்க வரும் போது அங்கு சமயம் சம்பந்தப்பட்ட எந்த விடயங்களும் இடம்பெறாது பார்த்துக்கொள்கின்றனர். வழிபாடுகள், இறை வணக்கங்கள் எதுவும் இங்கில்லை. தமது மதம் பற்றி மட்டுமே போதிக்கின்றனர். ஆங்கில மொழியில் கற்க மாணவர்கள் இங்கு ஆர்வமாக வருவதால் இப்பகுதிகளில் இயங்கி வந்த சைவ பாடசாலைகள் சில மூடப்படும் அபாயத்தில் உள்ளன. இது பாரதூரமான விடயமாக இப்போது மாறி வருகின்றது.

கேள்வி: இவ்வாறான அத்துமீறல்கள் தொடர்பில் பிரதேச அரசியல் பிரதிநிதிகள் ஏன் வாய் திறப்பதில்லை?

பதில்: இது இப்போதில்லையே, ஆரம்ப காலத்திலிருந்து இந்நிலைமை தொடர்கின்றதே! சிறிமா சாஸ்த்ரி ஒப்பந்தத்தின் போது மீண்டும் தமிழகம் சென்ற பத்து இலட்சம் பேரும் சைவர்கள் தானே. அவர்கள் இன்று இருந்திருந்தால் எமது சமூகத்தின் சனத்தொகை கோடியை தாண்டியிருக்கும்.

நாம் வலுவான சமூகத்தினராக உருவாகியிருக்கலாம். அது ஒரு திட்டமிட்ட செயற்பாடாகும். அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட போது வடக்கு கிழக்கு தமிழ் பிரதிநிதிகள் எவருமே வாய் திறக்கவில்லையே? அப்போதும் மௌனமாகத்தானே இருந்தார்கள்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் தாராளமாக காணிகள் இருந்தன. அவர்களை அங்கு குடியேற்றி விவசாயம் செய்ய வைத்திருக்கலாமே? அந்நேரம் அவர்கள் விட்ட தவறு தான் இன்று இலங்கையில் நாம் இப்போது பல இடங்களை பறி கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். மேலும் தற்போதுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் கிறிஸ்தவர்களும் அதிகம் இருக்கின்றனர். அனைவரும் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்தால் எமக்கு இந்த பிரச்சினைகள் இல்லை.

கேள்வி: குருந்தூர் மலை ஆதி சிவன் ஆலய விவகாரத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி விகாரை கட்டப்பட்டு வருகின்றதே இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதா?

பதில்: நாம் பல தடவைகள் குரல் கொடுத்துள்ளோம். இப்போதும் குரல் கொடுத்து வருகிறோம். சின்ன சின்ன விடயங்களுக்கெல்லாம் எமது நாட்டின் நீதிமன்றங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

ஆனால் நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி அங்கு ஒரு சம்பவம் நடப்பதை பார்த்துக் கொண்டு அவையும் (10ம் பக்கம் பார்க்க)

# ஆக்கிரமிப்பு நோக்குடன் செயற்படும் தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளை தடுத்து நிறுத்தவும் - சந்திரகுமார் ஜனாதிபதிக்கு கடிதம்


அறிவியல் ஒழுக்கத்தின் படியான வரலாற்று ஆய்வுகளுக்குப் பதிலாக, அதற்கு மாறான முறையில் ஆக்கிரமிப்பு நோக்குடன் வரலாற்றுப் புனைவைச் செய்யும் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி நாட்டை ஆபத்திலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இனப்பிரச்சினை, பொருளாதார நெருக்கடி போன்றவற்றினால் நாடு பலவிதமான துயரங்களில் புதையுண்டு போயிருக்கும் சூழலில், இவற்றிலிருந்து மீண்டெழுவதற்குப் பதிலாக மேலும் தீயை மூட்டுவதாகவும் புதைசேற்றில் அமிழ்த்துவதாகவுமே தொல்லியல் திணைக்களம் செயற்படு வருகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் நாடு தத்தளித்துக் கொண்டிருக்கும் போது மத முரண்பாடுகளையும் உருவாக்குவது மிகப் பெரிய பின்னடைவையே தரும். மதங்களின் முரண், இன முரணையும் விட மிக அபாயகரமானது. மிக ஆபத்தான ஒரு விசப் பூண்டாகும்.

உலகிலேயே ஆகப் பெரிய தீவினை என்றால், அது மதங் களுக்கிடையே உருவாகும் பூசலும் மோதலுமே. இதனால் வரலாற்றில் பல கோடிப் பேரின் உயிர்கள் பலியிடப் பட்டுள்ளது. உலகெங்கும் மதங்களின் மோதல் நடந்த காலம் அநேகமாக முடிந்து விட்டது. ஆனால் இலங்கை யில் அது உயிர்ப்படையப் போகிறதா என்ற அச்சம் ஏற்படுகிறது.

ஏனென்றால் கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் வடக்குக் கிழக்கில் தொல்லியல் திணைக்களத்தினாலும் படையினராலும் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல் இனமுரண், மதமுரண் நடவடிக்கைகளை கீழே அட்டவணைப்படுத்துகிறோம்.



1.நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி குருந்தூர்மலையில் விஹாரை அமைக்கப்பட்டமை.

2.பொத்துவில் பிரதேச செயலாளரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட தாண்டியடி சங்கமன்கண்டி படிமலை அடிவாரத்திலேயே இரவோடு இரவாக புத்தர் சிலை வைக்கப்பட்டமை.

3.வவுனியா வடக்கு ஊற்றுக்குளம் பகுதியில் புத்தர் சிலை அமைக்கப்பட்டமை.

4.யாழ்ப்பாணம் நெடுந்தீவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெடியரசன் கோட்டை தொல்லியல் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது.

5. நெடுங்கேணியில் வெடுக்குநாறி மலையில் அமைந்திருந்த ஆதிசிவன் கோவில் இரவோடிரவாக அழிக்கப்பட்டிருப்பது.

6.கச்சதீவில் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளமை.

இந்த நடவடிக்கைகள் தமிழ், முஸ்லிம் மக்களிடம் பதட்டத்தையும் கொந்தளிப்பையும் உருவாகியுள்ளன. இது மேலும் தொடருமாக இருந்தால் இலங்கைச் சமூகங்கள் மேலும் மேலும் பிளவுண்டு செல்வதற்கே வழிவகுக்கும். அப்படிச் சமூகங்கள் பிளவுண்டால் அதை வெளிச் சக்திகள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும்.

இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு. பல மதங்களுக்குரிய தேசம். பல் பண்பாட்டுக்குரிய இடம் என்பதற்குப் பதிலாக, நாட்டில் ஐக்கியத்தையும் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கி அதைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக தமிழ், முஸ்லிம் சமூகங்களைக் கலவரப்படுத்தும் வகையிலேயே மேற்படி தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகள் உள்ளன.

அறிவியல் ஒழுக்கத்தின் படியான வரலாற்று ஆய்வுகளுக்குப் பதிலாக, அதற்கு மாறான முறையில் ஆக்கிரமிப்பு நோக்குடன் வரலாற்றுப் புனைவைச் செய்யும் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகள் நிர்வாக நடைமுறைக்கும் முரணானதாக உள்ளது. அத்துடன், வரலாற்று ஆய்வாளர்கள், அறிஞர்களின் ஆய்வுக்கும் நிலைப்பாட்டுக்கும் மாறாகவே இந்த நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

மேலும் நாடு இன்றுள்ள சூழலில் இத்தகைய சிலைகளை அமைக்கும் நடவடிக்கைகள் அவசியமா? நாட்டில் தொழிற்சாலைகளையும் உற்பத்தி மையங்களையும் உருவாக்குவதற்குப் பதிலாக இனமுரணை ஏற்படுத்தும் விதமாக தொல்லியல் திணைக்களம் செயற்படுவது மிக மிகத் தவறானது. இது மேலும் பாரதூரமான பின்னடைவுகளையும் பின் விளைவுகளையும் உருவாக்கும். எனவே இது தொடர்பாக தாங்கள் உடனடியான இவற்றைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டு நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம் என குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ஈழத்தமிழரது மிதவாத அரசியல் கையறு நிலையை நோக்கி நகர்கிறதா?

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**பேராசிரியர் K.T.கணேசலிங்கம்**

**ஈழத்தமிழரசு அரசியல் முழுமையாக சூறையாடப்படும் நிலை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதற்கான எண்ணங்கள் நல்லாட்சி அரசாங்க காலத்தில் புறந்தள்ளப்பட்டது போல் புறந்தள்ளப்படுமாயின் ஒட்டுமொத்தமாக தேசிய அடையாளம் காணாமல் போக வாய்ப்புள்ளது.**

**அப்போது திருவள்ளுவர், நடராசர் சிலைகள் பற்றிய அரசியலை வளர்த்து அகமுரண்பாடுகளை உருவாக்கி கிறிஸ்தவனா? சைவனா? இந்துவா? சிறந்தவன் என மேடை போட்டு விவாதம் செய்து காலத்தைக் கழிக்கலாம். அல்லது வயிற்றுப் பிழைப்பைத் தேடும் நிலையை உருவாக்கலாம். அல்லது மீண்டும் ஒரு சங்கிலிய மன்னனைத் தேடலாம்.**

ஈழத்தமிழர் அரசியல் சூறையாடப்படும் நிலை கண்முன்னே நிகழ்வதை அவதானிக்க முடிகிறது. ஓர் இனத்தின் தேசிய அடையாளம் அதன் வாழ்விடத்தில் தங்கியுள்ளது. வாழ்விடமாகிய நிலம் பறிபோகுமாக இருக்குமாயின், அத்தேசிய இனத்தின் அனைத்து அடையாளமும் காணாமல் போய் விடும். காரணம் வாழ்விடமே பண்பாட்டையும் காலாசாரத்தையும் பொருளாதாரத்தையும் அதனோடு கூடிய அரசியலையும் தருகிறது.

அத்தகைய நிலத்தோடு கூடிய அரசியலை கல்லோயா விவசாயக் குடியேற்றத்துடன் ஆரம்பித்து கச்சதீவு வரையும் நீட்சி பெற்றுதுள்ளது. கௌதம புத்தரின் குடியேற்றமும் சிங்களப் பேரினவாதத்தின் பரம்பலும் ஒரே விதமான துயரத்தையே தமிழரது வாழ்வலி ஏற்படுத்தியுள்ளது. அரசுகளின் திட்டமிடலும் ஆட்சியாளரின் திட்டமிட்ட ஆக்கிரமிப்புகளும் தமிழர்களை நிலத்திலிருந்து அகற்ற முயல்கிறது. இக்கட்டுரையும் ஈழத்தமிழரது அரசியல் இருப்பின் சிதைவையும் அதனைத் தடுக்க பின்பற்ற வேண்டிய அரசியலையும் நேடுவதாக உள்ளது.

ஈழத்தமிழரது அரசியலில் மிதவாதத்தின் காலப்பகுதி முழுவதும் வடக்கு, கிழக்கு மீதான ஆக்கிரமிப்பு ஏதோவொரு வடிவத்தில் நிகழ்ந்து கொண்டே நகர்கிறது. அதனைத் தடுக்கும் வலிமையற்றும் அதன் விளைவுகளின் நிலை குறித்தும் எந்த எண்ணமும் இன்றி தமிழ்த் தேசியத்தை தாங்கிய கட்சிகளும் அதன் தலைமைகளும் காணப்பட்டன. தற்போது எத்தகைய இயலுமையுமின்றி ஒரு சில எண்ணிக்கையான கட்சித் தொண்டர்களைக் கொண்ட கவனயீர்ப்பை மேற்கொள்கின்றனர். அதனை சில ஊடகங்கள் போராட்டம் என்றும் ஆர்ப்பாட்டம் என்றும் தலைப்பிடுகின்றன. அதனைக் கூட ஏனைய கட்சிகள் செய்யமுடியாது காணப்படுகின்றன.

மக்கள் எழுச்சிப் போராட்டம் என்பது பாரியளவிலும் திரட்சி பெற்றதாகவும் அமைவதுடன், அதற்கு ஒரு இலக்கும். அதனை அடைவதற்கான வழிமுறையும் கொண்டதாக அமைவது அவசியமானது. உலகளாவிய ரீதியில் மக்கள் எழுச்சியானது அரசாங்கங்களின் அணுகுமுறையை மாற்றக் கூடியதாக அமைகிறது. அதுவே மக்கள் போராட்டத்தின் இலக்காகவும் அமைகிறது. ஈழத்தமிழர் அரசியலாவோ அல்லது அரசியல் மயவாக்கத்தின் வாயிலாகவோ கட்டமைக்கப்படவில்லை. கட்சி அரசியலாகவே வடிவமைக்கப்பட்டுள்ள னர். அதிலும் வாக்கு அரசியலுக்கு மட்டுமான தயார்படுத்தலுக்குள் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஈழத்தமிழரது அரசியல் அறிவு மயப்படுத்தப்படவில்லை. உணர்ச்சி வசதிக்கும் அறிவு மயத்திற்கும் இடைப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றனர். அதுவே மிதவாதத்தின் தோல்வியாகவுள்ளது. மிதவாதத்தின் தோல்வியே ஆயுத அரசியலுக்கான அடிப்படைக்கு வித்திட்டிருந்தது. ஆயுத அரசியலைக் கூட அறிவியல் தளத்தில் திட்டமிட முடியாததன் விளைவையே ஈழத்தமிழர் முள்ளிவாய்க்காலில் எதிர்கொண்டனர்.

அதன் விளைவுகளின் பின்பும் அரசியல் அறிவியலாக்கப்படாது உணர்வுகளுக்கும் தனிமனித அல்லது கட்சி நலனுக்கும் உட்படுத்தப்பட்டது. அதனால் கிடைத்த வாய்ப்புகளை நலன்பாற்பட்டு அரசியல் கட்சிகளும் அதன் பங்காளர்களும் கைவிட்டனர். சிலர் தென்னிலங்கை அரசியலின் சூழ்ச்சிக்குள் அகப்பட்டுக் கொண்டு அத்தகைய விருப்பு அரசியலை அரங்கேற்றினர். ஒட்டுமொத்தத்தில் எச்சரிக்கைகளையும் இடித்துரைப்புகளையும் நிராகரித்து விட்டு விருப்பு அரசியலை ஓரினத்தின் அரசியலாக்க முயன்றனர்.

இறுதியில் விருப்பு அரசியலும் அற்றுப் போனதுடன், ஓரினத்தின் அரசியலும் நான்கு நிசைகளிலும் காணாமல் போயுள்ளதை தெளிவாகக் காணமுடிகிறது. நாவற்குழி, வெடுக்குநாறி, வெடியரசன் கோட்டை மற்றும் கச்சதீவு என வடக்கு மக்களின் இருப்புக்கு எதிரான ஆக்கிரமிப்பு அரசியல் அரங்கேற்றப்படுகிறது. பலஸ்தீனர்களது குடியிருப்புகள் மீது யூதர்களது அணுகுமுறையும் யூத அரசாங்கங்களின் திட்டமிடல் போன்ற நிலை வடக்கில் தொடங்கியுள்ளதாகவே தெரிகிறது. கிழக்கிலங்கையின் ,ருப்பு கடந்த காலங்களில் கையாளப்பட்டது போன்றே தற்போது வடக்கு காணப்படுகிறது. உள்நாட்டுச் சூழவை தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தோற்கடித்தது போல் பிராந்திய பலத்தையும் தோற்கடித்து வருகின்றனர்.

இதற்கு மிகப்பிந்திய இந்திய மீனவர் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சையை கையாண்ட விதமே போதுமானதாக உள்ளது. தமிழக மீனவர்களுடன் ஈழத் தமிழ் மீனவர்கள் மோத வேண்டும் என்பதில் தென்னிலங்கை கவனமாக உள்ளது என்பது அனைவரும் தெரிந்து கொண்ட அரசியலாகும். தமிழகம் மட்டுமல்ல இந்தியாவுடன் ஈழத்தமிழர் உறவு வைத்துக் கொள்ளக் கூடாது என்பதில் தென்னிலங்கையின் பிரதான அரசியலாகவே உள்ளது.

அதனை எதிர் கொள்வதற்குப் பதிலாக தமிழ்த் தேசிய அரசியல் சக்திகள் தென்னிலங்கையின் அதே நிகழ்ச்சி நிரலுக்குள் பயணிப்பதை கண்டு கொள்ள முடிந்தது. ஈழத்தமிழர்களுக்காக எந்தனை தமிழக இளைஞர்கள் தீக்குளித்தார்கள் என்பதைக் கூட நினைவில் கொள்ளாது தென்னிலங்கைக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய போராட்டங்களை இந்தியாவுக்கும் தமிழகத்திற்கும் எதிராக நிகழ்த்தினார்கள்.

தமிழக மீனவர்களது நகர்வுகள் ஈழத் தமிழ் மீனவர்களது வாழ்வியலில் பாரிய பாதிப்புகளைத் தருகிறது என்பது யதார்த்தமானதே. ஆனால் அதனை அரசியலாக கையாளுகிற போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் தனித்துவமானதாக அமைந்திருக்க வேண்டும். ஈழத்தமிழ் மீனவர்களது கோரிக்கை நியாய மானது. தமிழக மீனவர்களையும் அவர்களது சங்கங்களையும் அரசியல் தலைவர்களையும் அதனோடு தொடர்புள்ள அமைப்புகளையும் சந்தித்து, உரையாடி தீர்வு காண்பதொன்றும் கடினமானதல்லவே. அவர்கள் ஈழத் தமிழரது அயலவர்கள். அதனை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமானது. இத்தகைய முரண்பாட்டை நீடிப்பதென்பது தென்னிலங்கைக்கு இலாபமானதாக அமையுமே அன்றி ஈழத்தமிழருக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. மாறாக மீளவும் எதிர்ப்பு வாதங்களால் மக்களுக்கும் மக்களுக்குமான உறவு சிதைவடையும். வெளியுறவில் மிக முக்கியமான ஒரு விடயம் மக்கள் -மக்கள் உறவு நிலையாகும். ஈழத்தமிழ்-தமிழக உறவு புவிசார் அரசியால் ஏற்பட்டதுடன், இன உறவினாலும் கட்டமைக்கப்பட்ட தொன்றாகும். அது மிகப் பலமானது. அதனை பேணுவதும் பாதுகாப்பதும் ஈழத்தமிழறது எதிர்காலத்திற்கு அவசியமானது.

இத்தகைய பிராந்திய அரசியல் சூழல் ஈழத் தமிழரது அரசியல் இருப்பை பாதிக்கச் செய்யக் கூடியது. அதனை மீட்டெடுக்க வேண்டிய நிலை அனைத்துத் தரப்பிடமும் உள்ளது. அது தனித்து தமிழகத்துடனானது மட்டுமல்ல. இந்தியாவுடனானதுமாகும். காரணம் இந்தியாவுடனேயே சர்வதேச அரசியலும் பூகோள அரசியலும் இயங்குகிறது. இந்துசமுத்திர பிராந்திய அரசியல் மற்றும் தென்னாரிய பிராந்திய அரசியல் இந்தியாவை மையப்படுத்தியே சுழல்கிறது. அதுவே சர்வதேச அரசியலிலும் பூகோள அரசியலிலும் தெறிப்படைகிறது.

அமெரிக்காவும் சீனாவும் இலங்கைத் தீவில் மையங் கொள்வதென்பது இந்தியாவின் இருப்பில் தங்கியுள்ளது. இந்த இரு நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்தியாவின் பொருளாதாரமே ஓரளவு பலமானது. சந்தையே இந்தியாவின் இருப்பு. இராணுவ ரீதியில் பலவீனமானது. இந்தியாவின் சமூக உறுதியின்மை அரசியல் கட்டமைப்பின் பலவீனம் என்பவற்றைக் கடந்து அமெரிக்காவின் அணியும் சீன,ரஷ்ய அணியும் பிராந்திய அரசியலை இந்தியாவுக்குள்ளாலேயே கையாளுகின்றன. இந்தியாவும் தனது பாரம்பரிய கொள்கையான நடுநிலைக்குள்ளால் இரு தரப்பையும் கையாளுகிறது. அது இரு அணியிலும் ஏதாவதொன்றை பலவீனமாக்கும். அதுவே பனிப்போர்க் காலத்திலும் நிகழ்ந்தது. ஆனால் இவ்வாறு கட்டப்படும் புதிய உலகத்திற்கான ஒழுங்கானது, ஈழத்தமிழர் போன்ற தேசிய இனங்களது இருப்புக்கு ஆபத்தானவையாகவே அமைய வாய்ப்புள்ளது. புதிய உலக ஒழுங்கு பற்றி விவாதிக்கும். அனைத்து ஆய்வுகளும் இரு துருவ அரசியலை நோக்கி உலகம் பயணிப்பதாக கருதுகின்றனர். அத்தகைய இரு துருவம் ஒரு போதும் கடந்தகால இரு துருவம் போல் அமையாது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். பழைய சோவியத் யூனியன் தலைமையிலான அணியானது ஏதோ ஒரு அடிப்படையில் தெளிவான இடதுசாரி சிந்தனையைக் கொண்டிருந்தது.

அது கார்ல் மார்க்ஸ், லெனின் சிந்தனையால் கட்டப்பட்ட யுகம், அதனிடம் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் தொடர்பில் தெளிவான சிந்தனையைக் கொண்டிருந்தது. அதனிடம் சில பலவீனங்கள் பிற்பகுதியில் நிலவினாலும் தேசிய இனங்களது பாதுகாப்புக்கு திட்டமிட்டிருந்தது. ஆனால் அதற்கு நிகரானதாக இன்றைய முகாம். அரசியல் அமையப் போவதில்லை என்பதை எல்லா ஆய்வாளர்களும் கோடிட்டுக் காட்ட முயல்கின்றனர். அப்படியாயின் ஈழத்தமிழர் தற்போது எழுந்துள்ள நெருக்கடியை எவ்வாறு எதிர்கொள்வதென்பது பிரதான கேள்வியாகும்.

ஒன்று, ஈழத்தமிழரது மட்டுமல்ல உலகளாவிய தளத்தில் ஒடுக்கப்பட்ட தேரிய இனங்களது தேசியவாதமானது சர்வநேச வாதத்தாலும் சூகோள வாதத்தாலும் உருவாக்கப்பட வேண்டும். இதனையே அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு பூகோள வாதமும் புதிய தேசியவாதமும்' என்ற நூலில் தெளிவாக ஆராய்ந்துள்ளார். இந்த இடத்திலேயே புலம்பெயர்ந்த ஈழத் தமிழரது அரசியல் விரிவடைய வேண்டிய தேவை எழுந்துள்ளது. அவர்களுக்கே அத்தகைய பலமும் சூழலும் உண்டு. புலத்திற்கான அரசியலை புலம் பெயர்ந்த தளத்திலிருந்து கட்டமைக்கும் போது சர்வதேச வாதமும் பூகோள வாதமும் உறுதுணையாக வேண்டும். அதற்குள்ளாலேயே தேசியங்களின் மீள் எழுச்சி சாத்தியமாக்கும். அது சித்தாந்தங்களால் கட்டமைக்கப்படக் கூடியதல்ல. யதார்த்த உலகத்திற்குள்ளால் உருவாக்கப்பட வேண்டியது.

இரண்டு, ஈழத்தமிழரது அரசியலில் பிராந்தியமும் புலமும் புரிதலுடன் இயங்க வேண்டும். அதற்கான கட்டமைப்புகள் அரசியல் கட்சிகளால் மட்டுமல்ல சிவில் மற்றும் தொழிற்சங்கங்களாலும் ஏற்படுத்தப்பட வேண்டும், அதனை அறிவியல் பூர்வமானதாக உருவாக்க வேண்டும். அதனை கட்சி அரசியலுக்குள்ளால் பார்க்காது, தனிப்பட்ட விருப்புகளால் நோக்காது ஒட்டுமொத்த தேசிய இனத்தின் வடிவமாக நோக்கப்படுதல் வேண்டும். இதற்கான உரையாடல் அவசியமானது. சொத்தையும் வாக்கையும் பாதுகாக்கும் அரசியலை கைவிட்டு விட்டு தேசிய அடையாளத்தை பாதுகாக்கும் அரசியலை கவனத்தில் கொள்ள வேண்டும். அக.புற முரண்பாடுகளை வளர்க்காது செயல்பட முனைய வேண்டும்.

மூன்று, புலத்தில்ஒன்றிணையும் தேவை அனைத்துத் தரப்புக்கும் ஏற்பட்டுள்ளது. தேசியத்தை பற்றிய புரிதலுள்ள அனைத்துத் தரப்பும் ஒன்றிணைந்து எழுச்சி பெறுவதுடன், தொடர்ச்சியாக மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் தேவையாகவுள்ளது. அவை அனைத்தும் உலகளாவிய ஜனநாயக நியமங்களுக்குட்பட்டதாக அமைய வேண்டும். சர்வதேச சட்டவிதிகளை நிராகரித்து விட்டு செயல்படாத போக்கும் அதற்கான புரிதலும் தேவையானதாக உள்ளது. இதற்குள் இணைந்து கொள்ளாத எந்த அரசியல் கட்சியையும் தேர்தல் அரசியலிலிருந்து (22ம் பக்கம் பார்க்க)

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

01 ஏப்ரல் 2023 முதல் 07 ஏப்ரல் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறு வட்டக்கச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்தினி அம்மா வைத்தியநாதன் அவர்களின் எட்டாவது ஆண்டு நினைவு நாள் 02 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பத்தினி அம்மா வைத்தியநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னையா நல்லதம்பி

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களுடைய 13வது ஆண்டு நினைவு நாள் 03 ஏப்ரல் 2023 திங்கம்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னையா நல்லதம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

(7ம் பக்கத் தொடர்ச்சி) மௌனம் காக்கின்றன. இதை என்னவென்று சொல்வது? நீதிதேவனின் மயக்கம் எமக்கு விளங்கவில்லை. எமது சமயத்துக்கும் வரலாற்றுக்கும் ஏற்பட்டுள்ள அபாயத்துக்கு இது ஒரு நல்ல உதாரணம். மேலும் தொல்லியல் திணைக்களமானது இன்று முற்று முழுதாக பௌத்தத்தை நிலைநாட்டும் ஒரு அமைப்பாக மாறி விட்டது. அவர்கள் வரலாற்றை ஆராய்ச்சி செய்யும் அமைப்பினர் அல்லர். சைவ அடையாளங்களை எடுத்து விட்டு பௌத்த அடையாளத்தை அங்கு வைக்கும் செயற்பாடுகளை முன்னேஸ்வரம் தொடக்கம் கோனேஸ்வரம் வரை செய்து வருகின்றனர். இவர்கள் பௌத்த பாரம்பரிய பிரதேசங்களை விடுத்து சைவ பிரதேசங்களில் தமது காரியாலயங்களை திறக்கின்றனர்.

கன்னியாய் வெந்நீரூற்று பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இவர்கள் அந்த கட்டண ரசீதில் 'அநுராதபுர பௌத்த கால புனித தீர்த்தம்' என்று குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் தேசத்தின் தொன்மையை காப்பதற்கான பிரிவினர் அல்லர். இவர்கள் வரலாற்றை மாற்றும் பிரிவினர்

கேள்வி: கீரிமலை ஆதி சிவன் ஆலயம் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டு அங்கு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டுள்ளதே?

பதில்: கீரிமலை ஆதி சிவன் ஆலயப்பகுதியிலிருந்து காங்கேசன் துறை வரையிலான பகுதிகள் கடந்த 33 வருடங்களாக உயர் பாதுகாப்பு பகுதியாக இராணுவ கட்டுப்பாட்டில் இருந்தன. இங்குள்ள சிவன் ஆலயம், கிருஷ்ணர் கோயில், கதிரைநாதன் கோயில் ஆகியவற்றுக்கு மக்கள் போக முடியாத சூழல் இருந்தது. போர் முடிந்த பிறகு, அகில இலங்கை இந்து மாமன்றத்துடனும் நாம் இணைந்து கடந்த காலங்களில் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச, மைத்ரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ச, இப்போதுள்ள ரணில் விக்ரமசிங்க ஆகியோரிடம் சென்று இப்பகுதியை விடுவிக்கும்படி கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

இங்கு அமைக்கப்பட்ட பிரமாண்டமான ஜனாதிபதி மாளிகையை இவர்களால் பராமரிக்க முடியவில்லை. எனவே அதை நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டு வந்து, அதன் மூலம் வருமானம் பெறும் வழிகள் குறித்து ஆராய்ந்த போது தான் சமீபத்தில் அம்மாளிகை அமைந்துள்ள இடத்துக்கு அருகிலுள்ள இடங்களை விடுவித்தனர். ஆனால் ஆலயங்கள் அமைந்திருந்த இடங்களை விடுவிக்கவில்லை. இந்நிலையில் வடக்கில் ஜனாதிபதி கலந்து கொண்ட தைப்பொங்கல் விழாவின் போது நல்லை ஆதினத்தை சந்திக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வந்த போது ஆலயப்பகுதிகளை விடுவிக்கும் படி நாம் கோரிக்கை விடுத்திருந்தோம்.


அவர் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். அதன் பிறகு வலி வடக்கு பிரதேச செயலாளர் ஊடாக இப்பகுதியில் கிருஷ்ணர் ஆலயத்தை பராமரித்து வந்த மூவர் அப்பகுதிக்கு செல்ல அனுமதி கிடைத்தது. அவர்கள் அங்கு சென்று பார்த்து வந்த பின்னரே எமக்கு இந்த பேரதிர்ச்சி காத்திருந்தது.ஆதி சிவன் ஆலயம் அவ்விடத்தில் இல்லை என்றும் சித்தர் சடையம்மா மடம் முற்றாக அழிக்கப்பட்டிருப்பதாகவும் எமக்குத் தெரிவித்தனர்.

நாம் இதற்கு கடும் கண்டனங்களை வெளிப்படுத்தினோம். பின்பு கடந்த வாரம் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் மூலம் அவ்விடத்துக்கு நான் சென்றேன். சிறுவயதில் நான் பார்த்து தரிசித்த ஆதி சிவன் ஆலயத்தை காணவில்லை. பல மக்கள் வந்து தங்கி உணவுண்டு இளைப்பாறி சென்ற பெண் சித்தர் சடையம்மாள் மடத்தை காணவில்லை. அவரது சமாதியும் அழிக்கப்பட்டிருந்தது.

பெண் சித்தர் சடையம்மாள் 1936 ஆம் ஆண்டு இங்கு வந்து தங்கி இங்கேயே சமாதியானவர். அவர் கதிர்காமம், நல்லூர் கந்தசாமி ஆலயம், தமிழகத்தின் திருச்செந்தூர் ஆகிய ஆலயங்களில் மடம் அமைத்தவர். யாழ்ப்பாணம் நல்லூரடியைச் சேர்ந்த அந்த சித்தர் இறுதி காலத்தை கீரிமலை ஆதி சிவனடியிலேயே கழித்தார். அவரது சமாதிக்குள் இருந்த சிவலிங்கத்தை பற்றைக்காடுகள் மூடியிருந்தன.

ஒருவாறு அதை நான் அடையாளம் கண்டேன். இப்பகுதியிலிருந்து ஏனைய சித்தர் சமாதிகளை காணவில்லை. நாம் ஆலயங்கள் இருந்த பகுதிகளை முழுமையாக விடுவிக்க கோரிக்கை விடுத்திருக்கின்றோம். அங்கு மீண்டும் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து ஆலயத்தை கட்டியெழுப்பிக் கொள்கிறோம் என்று கூறியுள்ளோம். எமக்கு மீள கிடைத்துள்ள பாரம்பரிய இடங்களை எவ்விதத்திலும் நாம் இழந்து விடக்கூடாது. இதற்க அனைவரினதும் ஒத்துழைப்பு எமக்குத் தேவை.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




02 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறு, வட்டக்கச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்தினிஅம்மா வைத்தியலிங்கம் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




02 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை பர்மிங்கம் இங்கிலாந்தில் வாழும் திருமதி லலிதா கண்ணன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி லலிதா கண்ணன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




03 ஏப்ரல் 2023 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




அல்பியன் பதியில் கோயில்கொண்டருளியிருக்கும்

அருள்மிகு கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

ஏகதின இலட்சார்ச்சனையும் மகாஹோமமும்

நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் பங்குனி திங்கள் 24ம் நாள்(07-04-2023) வெள்ளிக்கிழமை நடைபெற அம்பாள் திருவருள் கூடியுள்ளது. அன்று காலை 7மணிக்கு விக்னேஸ்வர பூஜையுடன் இலட்சார்ச்சனையும் மகாஹோமமும் ஆரம்பமாகும் தொடர்ந்து, 12மணிக்கு மதிய பூசையுடன் அன்னதானமும் வழங்கப்படும். மீண்டும் மாலை 4மணிக்கு தொடங்கி 7மணி பூஜையுடன் பூர்த்தியாகும்.

இப்பூஜையானது நினைத்த காரிய நிறைவு பெறும், உடல் மனம் சார்ந்த பிரச்சினைகள் ஆகலும், மாங்கல்ய பலன் கிடைக்கும், கடன் சுமை அகலும், புத்திரபாக்கியம் கிடைக்கும்

அர்ச்சனை ஹோமத்தில் கலந்து சிறப்பிக்கும் குருமார்

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ அறுமுக குருக்கள்
மோகன் ஐயா
சர்வ போதக ஆசிரியர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள்
சாதக ஆசிரியர் சிவஸ்ரீ வெங்கட் ரமணக் குருக்கள்
சிவஸ்ரீ கீர்த்தன ராஜக் குருக்கள்
சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள்
சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள்
சிவஸ்ரீ செல்வ கிருபாகரக் குருக்கள்
சிவஸ்ரீ கரீந்திரக் குருக்கள்
சிவஸ்ரீ தினேஸ்சிவக் குருக்கள்
சிவஸ்ரீ கந்தசாமிக் குருக்கள்
சிவஸ்ரீ பாலகிருஷ்ணக் குருக்கள்
சிவஸ்ரீ சந்துருக் குருக்கள்
சிவஸ்ரீ முருகன் குருக்கள்
சிவஸ்ரீ செல்வராஜக் குருக்கள்
சிவஸ்ரீ வரதராஜக் குருக்கள்
சிவஸ்ரீ சிவானந்தராஜக் குருக்கள்
சிவஸ்ரீ மோகன் வைரவசுந்தரம் குருக்கள்
யோகநாதன் ஐயா
சாந்தரூபன் ஐயா
சிவகுமார் ஐயா
வரதன் ஐயா
கோனேஸ் ஐயா
ரூபன் ஐயா
பிரணவன் ஐயா
சிவம் ஐயா

இலட்சார்ச்சனை, மகாஹோமத்தில் பங்கு பெற்ற விரும்பும் அடியார்கள் ஆலயக்காரியலயத்துடன் தொடர்பு கொள்ளவும்

1771 ALbion Road. Unit #1, Toronto, Ontario, M9W 5S7, Canada. 416.213.0110

இவ்வண்ணம்: ஆலய தர்மகர்த்தா சபையினர்

# Bolton Honda

65 Pillsworth Road, Bolton, ON, L7E 4E9

**Lease from 4.08% on select 2023 models**

## LEASE TO OWN



$93

weekly - Plus TAX

$0 down @ 6.58%

CANADIAN BUILT

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr

**2023 CIVIC LX Model**




## USED VEHICLES

Over 100 USED Vehicles

HONDA | TOYOTA
LEXUS | ACURA
BMW | AUDI

**2023 CR-V HYBRID Available**

**CIVIC**
20 in stock

**CR-V**
15 in stock

**ACCORD**
10 in stock

**ODYSSEY**
10 in stock

NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

HONDA certified used vehicles come with 7 Years or 160,000 km Warranty



புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

tonymidtown@hotmail.com

**Tony Siva** 647.269.0749

Sales & Leasing Executive

# வள்ளுவரில் இருந்து வெடுக்குநாறி மலைக்கு!

வவுனியா வெடுக்குநாறி மலையில் வழிபாட்டுருக்கள் சிதைக்கப்பட்டமை திட்டவட்டமாக ஒரு பண்பாட்டுப் படுகொலை தான். ஆனால் அந்தத் தீமைக்குள் ஒரு நன்மை உண்டு. அச்சம்பவம் தமிழ் மக்களை உணர்ச்சிகரமான ஒரு புள்ளியில் ஒன்று திரட்டியுள்ளது. இதுதொடர்பாக சைவ மகாசபை ஒழுங்குபடுத்திய எதிர்ப்பில் ஒரு கிறிஸ்தவ மதகுரு காணப்பட்டார். கத்தோலிக்கத் திருச்சபையின் நீதிக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப்பு அது தொடர்பாக ஒரு அறிக்கையும் வெளியிட்டிருக்கிறது. இதுஅண்மை நாட்களாக தமிழ்மக்கள் மத்தியில் மதரீதியான அக முரண்பாடுகளைத் தூண்டி வரும் சக்திகளின் வேகத்தை ஒப்பீட்டளவில் தடுக்குமா?

ஒரு புறம் சிங்கள பௌத்த மயமாக்கல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இன்னொருபுறம் இந்து கிறீஸ்தவ முரண்பாடுகள் ஊக்குவிக்கபடுகின்றன.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஆவிக்குரிய சபைப் போதகரான போல் தினகரன், அவர் கலந்து கொள்ளவிருந்த மத நிகழ்ச்சியை ரத்துச்செய்ய வேண்டியிருந்தது. அதற்கு வெளிப்படையாகச் சொல்லப்பட்ட காரணம் அவர் வணிக விசாவில் வந்தமை தான் என்று கூறப்பட்டது. ஆனால் வெளியில் சொல்லப்படாத காரணம் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டியங்கும் ஈழத்துச் சிவசேனாவின் எதிர்ப்புதான் என்று ஊகிக்கப்படுகிறது. அல்லது சிவசேனையின் வற்புறுத்தலால் அவ்வாறு அப்போதகரை விசாரிக்க வேண்டி வந்தது என்ற ஒரு தோற்றம் உண்டாகக் கூடிய விதத்தில் அரசாங்கம் காய்களை நகர்த்தியிருக்கிறது என்றும் கூறலாம். போதகர் போல் தினகரன் இதற்கு முன்னரும் வந்து போயிருக்கிறார். அப்பொழுதெல்லாம் அவருக்கு வணிக விசா தான் வழங்கப்பட்டது. சுற்றுலா விசாவில் வருகை தருபவர்கள் மதப் பிரச்சார நிகழ்வுகளில் பங்கு பற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

அவருக்கு விசாவை வழங்கியது சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம். அந்த விசாவை வழங்கும் பொழுது அவர் என்ன தொழிலுக்காக யாப்பாணத்துக்குப் போகிறார் என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கும். அவர் நேரடியாக யாழ்ப்பாணம் வரவில்லை. முதலில் கொழும்புக்குத் தான் வந்தார். கொழும்பில் நான்கு நாட்கள் இருந்தார். அங்கே ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார். அவருக்காகப் பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனை செய்யும் பொழுது ரணில் விக்கிரமசிங்க அவருக்கு முன் அடக்க ஒடுக்கமாக நிற்கும் ஒளிப்படம் சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகிறது. அதன்பின் அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். பலாலி விமான நிலையத்தில் அவர் கிட்டத்தட்ட 4 மணித்தியாலங்கள் விசேஷமாக விசாரிக்கப்பட்டிருக்கிறார்.

அவரை விசாரிப்பதற்கு என்று இரண்டு அதிகாரிகள் கொழும்பிலிருந்து விசேஷமாக வருகை தந்ததாகவும் ஒரு தகவல். அந்த விசாரணையின் விளைவாக அவர் ஏற்கனவே மானிப்பாயில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மத நிகழ்ச்சியை ரத்துச் செய்து விட்டு தமிழ்நாட்டுக்குத் திரும்பி விட்டார்.

இதுதொடர்பில் அந்த மத நிகழ்வை ஒழுங்கு படுத்தியவர்கள் ஜனாதிபதியோடு தொடர்பு கொள்ள முற்பட்ட போதும் திருப்தியான பதில் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதற்கு முன்னரும் அவரைப் போன்ற போதகர்கள் இலங்கைக்குள் வந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் வணிக விசாவோடு தான் வந்திருக்கிறார்கள். இப்பொழுது மட்டும் வணிக விசா ஏன் ஒரு விவகாரமாக காட்டப்படுகிறது? அப்படியென்றால் அவரைப் போன்ற போதகர்கள் எந்த விசா எடுத்துக் கொண்டு நாட்டுக்குள் வரவேண்டும்? அதிலும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடக்காத ஒரு விசாரணை ஏன் பலாலி விமான நிலையத்தில் நடந்தது? யாழ்ப்பாணம் ஒரு தனி நிர்வாக அலகா? அவ்வாறு பலாலி விமான நிலையத்தில் ஒரு விசேஷ விசாரணையை நடத்தியதன் மூலம் சிவசேனையிடமிருந்து நெருக்குதல் வருகிறது, அதனால் தான் அவ்வாறு விசாரிக்க வேண்டி வந்தது என்று காட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றதா?




எந்த ஜனாதிபதி போதகர் போல் தினகரனிடம் ஆசீர்வாதங்களைப் பெற்றாரோ அவருடைய அரசாங்கத்தின் இரண்டு அதிகாரிகள் போதகரை பிந்நேரம் நான்கு மணியிலிருந்து இரவு 8 மணிவரை விசாரித்திருக்கிறார்கள் என்றால் ரணில் விக்கிரமசிங்க இதில் யாருக்கு உண்மையாக இருந்திருக்கிறார்? போதகர் தினகரனுக்கா? அல்லது ஈழத்துச் சிவசேனைக்கா?

நிச்சயமாக அவர் இரண்டு தரப்புக்கும் உண்மையாக நடக்கவில்லை. மாறாக,அவர் சிங்கள பௌத்த அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு விசுவாசமாக நடந்திருக்கிறார். அதன்படி தமிழ் மக்களுக்கிடையே அக முரண்பாடுகளைத் தூண்டும் விதத்தில் நிலைமைகள் கையாளப்பட்டிருக்கின்றன. சிவசேனை நெருக்கடிகளை கொடுத்தபடியால் தான் அந்த மத நிகழ்வை நடத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது என்று ஒரு தோற்றம் ஏற்படக்கூடிய விதத்தில் நிலைமைகள் நகர்த்தப்பட்டிருக்கின்றன. அதாவது ஆவிக்குரிய சபைகளுக்கும் சிவசேனைக்கும் இடையிலான முரண்பாட்டை கூர்மைப்படுத்தும் உள்நோக்கம் உண்டா?

ஈழத்துச் சிவசேனை மேற்படி போதகரின் வருகையைப் பலமாக எதிர்த்தபடியால் தான் அவர் அவ்வாறு விசாரிக்கப்பட்டார் என்பது உண்மையென்றால் இந்த விடயத்தில் ஈழத்துச் சிவசேனைக்கு ஏதோ ஒரு வெற்றி கிடைத்திருக்கிறது என்று பொருள்.அதாவது தமிழ்மக்கள் மத்தியில் அகமுரண்பாடுகளை ஊக்குவிக்கும் ஒரு வெற்றி.

ஆனால் அதே ஈழத்துச் சிவசேனையால் குருந்தூர் மலையில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் கட்டுமானங்களை ஏன் அகற்ற முடியவில்லை? அல்லது வெடுக்குநாறி மலையில் சிவனாலயம் சிதைக்கப்படுவதை ஏன் தடுக்க முடியவில்லை? திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்றில், உயர் பாதுகாப்பு வலையங்களில் சைவ மரபுரிமைச் சின்னங்கள் சிதைக்கப்படுவதை ஏன் தடுக்க முடியவில்லை?

இது தான் கேள்வி. சிங்கள பௌத்த மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈழத்துச் சிவசேனையால் வெற்றி பெற முடியவில்லை. அதாவது சிவசேனை எந்த எந்த விடயங்களில் வெற்றி பெற வேண்டும் என்பது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களின் படிதான் நடக்கிறது. அதனால் தான் ஈழத்துச் சிவசேனைக்கு சிங்கள பௌத்த தீவிரவாத மதகுருவான ஞானசார தேரர் இணக்கமானவராக தெரிகிறார். ஆனால் சக கிறிஸ்தவர்கள் விரோதிகளாகத் தெரிகிறார்கள். வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்க்கும் கிழக்கு மைய கட்சிகளுக்கு வடக்கு விரோதியாகத் தெரிகிறது. ஆனால் ராஜபக்சக்கள் நண்பர்களாகத் தெரிகிறார்கள்.

இப்பொழுது கூட்டிக் கழித்துப் பார்த்தால் விடை தெளிவாகக் கிடைக்கும். தமிழ் மக்களை பிரதேச ரீதியாக் சமய ரீதியாக் சாதி ரீதியாகப் பிரித்துக் கையாள முற்படும் சக்திகள் அதாவது தமிழ்மக்கள் மத்தியில் உள்ள அக முரண்பாடுகளை உருப்பெருக்கி அரசியல்செய்ய முற்படும் சக்திகள் ராஜபக்சங்களுக்கும் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்துக்கும் நண்பர்களாக இருக்கிறார்கள்.ஆயின் யாருடைய நிகழ்ச்சி நிரலை அவர்கள் முன்னெடுக்கிறார்கள்?

கடந்த சில வாரங்களாக நான் எழுதிய கட்டுரைகளுக்கு எனது நண்பர் ஒருவர் வாட்ஸ் அப்பில் பதில்வினையாற்றியிருந்தார். கிறிஸ்தவ சிறு சபைகளின் மதமாற்ற நிகழ்ச்சி நிரல் தான் ஈழத்துச் சிவசேனை போன்ற அமைப்புக்களின் வளர்ச்சிக்கு காரணம் என்று அவர் கருதுகிறாரோ தெரியவில்லை. அவர் படித்தவர், பொறுப்பான அரசு உத்தியோகத்தில் இருப்பவர்.குறிப்பாக தன் தொழில் வரையறைகளைத் தாண்டி சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்காக மகத்தான தொண்டைச் செய்பவர். ஆனால் மதம் மாற்றும் சபைகளுக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டோடு காணப்படுகிறார். தமிழ்த் தேசியத்தை மதப் பல்வகைமைகளின் மீது கட்டியெழுப்ப வேண்டும் என்ற எனது விளக்கமானது மதம் மாற்றிகளுக்கு

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



சாதகமானது என்று அவர் கருதுகிறாரோ தெரியவில்லை. இந்த இடத்தில் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். இக்கட்டுரையானது கோட்பாட்டு ரீதியாக மத மாற்றத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.ஆனால் எந்த மதத்தை பின்பற்ற வேண்டும் என்பது ஒருவருடைய தனிப்பட்ட உரிமை.அந்த ஜனநாயக உரிமையில் யாரும் தலையிட முடியாது.

நான் மிகவும் மதிக்கும் ஒரு ஆன்மீகவாதி ஒருமுறை சொன்னார் மத மாற்றம் அறியாமையின் மீதே நிகழ்கிறது என்று. எல்லா மதங்களும் ஒரே இறுதியிலக்கை நோக்கித் தான் வழி நடத்துகின்றன. தான் பிறந்த மதத்தைப் பற்றிய சரியான விளக்கம் உள்ள ஒருவர், இன்னொரு மதத்திற்கு மாற வேண்டிய தேவை இருக்காது. மதம் மாறும் ஒருவர் தன் மதத்தைப் பற்றியும் விளங்கிக் கொள்ளாதவர் மாறிய மதத்தைப் பற்றியும் விளங்கிக் கொள்ளாதவர் என்று அவர் கூறுவார்.

அறியாமை தவிர மதமாற்றத்திற்கு வறுமை,சமூக ஏற்றத் தாழ்வுகள், நலன் சார் தேவைகள்..போன்ற காரணங்களும் உண்டு. இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் மதமாற்றத்தின் பின்னணியில் இருக்கும் அறியாமை, வறுமை, சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றை அகற்ற வேண்டிய பொறுப்பு மதமாற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் மதப் பிரிவினருக்கு உண்டு. அது மட்டுமல்ல தம்மை குறிப்பிட்ட ஒரு மதத்தின் காவலர்களாக காட்டிக் கொள்ளும் அனேகர் தமது மதம் கூறும் பேருண்மைகளை அறியாதவர்களே. உண்மையான ஆன்மீகவாதிகள் வெறுப்பை விதைப்பதில்லை, மகிழ்ச்சியையும் அன்பையும் தான் விதைக்கின்றார்கள்.

ஆனால் சில நாட்களுக்கு முன் ஈழத்துச் சிவசேனையின் தலைவர் தனது இல்லத்தில் நடத்திய ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் மத மாற்றிகளை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டும் என்று கூறியதாக ஒரு செய்தி வெளிவந்தது. அவர் அவ்வாறு கூறிய காலகட்டத்தில் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கான சட்டமூலம் வெளியிடப்பட்டிருந்தது. தமிழ் மக்கள் பயங்கரவாத தடைச் சட்டமே வேண்டாம் என்று கோரிக்கை வைக்கும் ஒரு காலகட்டத்தில் அச்சட்டத்தை பயன்படுத்தி தமிழ் மக்களில் ஒரு பிரிவினரைத் தண்டிக்க வேண்டும் என்று ஒருவர் கேட்கிறார். ஆயின் அவர் யார்? அவருடைய எதிரிகள் யார்? நண்பர்கள் யார்?

ஏற்கனவே தமிழ்மக்களை பிரதேச வாதத்தின் பெயரால் பிரிக்கும் சக்திகள் தென்னிலங்கையில் உள்ள கட்சிகளின் ஆதரவோடு கிழக்கில் பல மடைந்து வருகின்றன. இப்பொழுது வடக்கை மத ரீதியாகப் பிரிக்கும் சக்திகள் துடிப்பாக உழைக்கத் தொடங்கி விட்டன. தமிழ்மக்கள் மத்தியில் உள்ள தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள்

(22ம் பக்கம் பார்க்க)








## சித்திரைப் புத்தாண்டு 2023 சுபநேரங்கள்
## வாக்கிய பஞ்சாங்கம்

### புது வருடப்பிறப்பு

14-04-2023 வெள்ளிக்கிழமை

பிற்பகல் 02 மணி 03நிமிடத்தில் சோபகிருது வருடம் பிறக்கின்றது

### விஷு புண்ணிய காலம் - (மருத்து நீர் வைக்கும் நேரம்)

14.04.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.03 முதல்

மாலை 06.03 வரை

தலை - கொன்றை இலை, கால் - புங்கை இலை

திசை - கிழக்கு அல்லது வடக்கு

### கை விஷேடம் பரிமாறும் நேரம்

15ம் திகதி காலை 7.52 முதல் காலை 9.00 வரை

16ம் திகதி காலை 7.49 முதல் காலை 9.48 வரை

### அணியும் ஆபரணங்கள்

முத்துப்பதித்த ஆபரணங்கள்

### அணியும் ஆடைகள்

வெள்ளை நிறப்பட்டாடை

### சங்கிரமதோஷ நட்சத்திரங்கள்

மிருகசீரிடம் (03ஆம், 04ஆம் பாதங்கள்) திருவாதிரை,

புனர்பூசம் (01ஆம், 02ஆம், 03ஆம் பாதங்கள்)

அஸ்தம், உத்தராடம் (02ஆம், 03ஆம், 04ஆம் பாதங்கள்)

திருவோணம், அவிட்டம் (01ஆம், 02ஆம் பாதங்கள்)

### வியாபாரம், புதுக்கணக்கு ஆரம்பித்தல்

15.04.2023 சனிக்கிழமை காலை 7.52 தொடக்கம் காலை 9.00 வரை

16.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 7.49 தொடக்கம் காலை 9.48 வரை

www.sooriyanfm.lk

SOORIYAN FM

103.6 / 103.4

# இராஜதந்திரிகளின் எல்லையைப் புரிந்து கொள்ளுதல்

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்தது ஒரு ஆச்சரியமென்றால், அடுத்த ஆச்சரியம் அவரது காலநிலை ஆலோசகராக நோர்வேயின் சமாதான ஒருங்கிணைப்பாளர் எரிக் சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டிருப்பதாகும். மீண்டும் சொல்ஹெய்ம் இலங்கைக்குள் பிரவேசித்திருக்கின்றார். நோர்வேயின் இராஜதந்திரியும் அரசியல்வாதியுமான எரிக் சொல்ஹெய்ம், 2000ஆம் ஆண்டு நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகராக இணைந்து கொள்வதற்காக தனது அரசியல் வாழ்விலிருந்து வெளியேறினார்.

இந்த பின்புலத்தில்தான் இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில் எரிக் சொல்ஹெய்மின் பிரவேசம் நிகழ்ந்தது. நோர்வேயின் அனுசரணையில் இடம் பெற்ற 2002 – 2005 வரையிலான சமாதான முன்னெடுப்புகளில் சொல்ஹெய்ம் பிரதான செயற்பாட்டாளராக பணியாற்றியிருந்தார். 2005 ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து சொல்ஹெய்ம் மீளவும் நோர்வேயின் அரசியலுக்குத் திரும்பினார்.

2001இல் அமெரிக்க இரட்டைக் கோபுரங்களின் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலானது, ஆயுத விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்கான சாவுமணியானது. அமெரிக்கா பயங்கரவாதத்தின் மீதான யுத்தத்தை பிரகடனப்படுத்தியது. குறித்த கொள்கையானது, அரசுக்கு வெளியில் நிறுவனமயப்பட்டிருக்கும் ஆயுத அமைப்புகள் அனைத்தையும் பயங்கரவாதமென்னும் ஒரு சொல்லின் மூலம் அழிப்பதற்கான வாய்ப்பை அரசுகளுக்கு வழங்கியது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம், நோர்வேயின் சமாதான முன்னெடுப்பு முயற்சிகளுக்கு பச்சைக்கொடி காண்பித்தது. 2002இல் இடம் பெற்ற பொதுத்தேர்தலில் ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து சமாதான முன்னெடுப்புகளை முன்னெடுப்பதற்கான சூழல் கனிந்தது. இத்துடன் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுற்று விடுமென்னும் நம்பிக்கையும் மக்கள் மத்தியில் பரவலடைந்தது. எனினும் சமாதான முன்னெடுப்புகள் தங்களுக்கான பொறியாக மாறுவதாகக் கருதிய விடுதலைப் புலிகள் அமைப்பு, நோர்வேயின் சமாதான முன்னெடுப்புகளிலிருந்து வெளியேறுவதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்தியது.

ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்து நோர்வேயின் சமாதான முன்னெடுப்பை எதிர்க்கும் மகிந்த ராஜபக்ஸவை அதிகாரத்திற்கு கொண்டு வருவதன் ஊடாக இந்தப் பொறியிலிருந்து வெளியேற முடியுமென்று புலிகள் கணக்கிட்டனர். ரணில் விக்கிரமசிங்க அடிப்படையில் ஒரு ஜனவசியமுள்ள சிங்களத் தலைவர் அல்ல. ரணில் வெற்றி பெற வேண்டுமென்றால் அவருக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு கட்டாயம் தேவை. இந்த விடயத்தை துல்லியமாக கணித்துக் கொண்ட விடுதலைப்புலிகளின் தலைமை, தமிழ் மக்களின் வாக்குகள், ரணிலுக்குச் செல்வதைத் தடுப்பதன் ஊடாக அவரை தோற்கடிக்க முடியுமென்று கணக்கிட்டது. அந்தக் கணக்கில் வெற்றியும் பெற்றது.

ரணில்விக்கிரமசிங்க தேர்தல் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து நோர்வேயின் சமாதான முன்னெடுப்புகளுக்கான கதவும் மூடப்பட்டது. புலிகள் தோற்கடித்தது ரணில் விக்கிரமசிங்கவை மட்டுமல்ல எரிக் சொல்ஹெய்மையும் தான். 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஒரு பொறியாகக் கருதிய விடுதலைப்புலிகள் அமைப்பு, அதிலிருந்து வெளியேறுவதற்கான முயற்சியில் பிரேமதாசவுடன் கூட்டுச் சேர்ந்து இந்தியப் படைகளை எதிர்த்தது. இந்தியப் படைகளை வெளியேற்றும் முயற்சியில் வெற்றியும் பெற்றது.

அதே உக்தியைத் தான் இங்கும் பயன் படுத்தியது. நோர்வேயின் சமாதான முன்னெடுப்புகளிலிருந்து வெளியேறுவதற்காக மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியை ஊக்குவித்து நோர்வேயை வெளியேற்றியது. ஆனால் காலம்



பின்னர் கற்றுத்தந்த பாடமோ முற்றிலும் வேறானது. அதாவது, விடுதலைப்புலிகள் மற்றவர்களை வெளியேற்றுவதில் வெற்றி பெற்று விட்டதாக எண்ணிய இரண்டு சந்தர்ப்பங்களிலும் உண்மையிலேயே தனிமைப் படுத்தப் பட்டு அரசியலில் தனித்து விடப் பட்டது விடுதலைப்புலிகள் அமைப்பு மட்டுமேயாகும்.

பிரேமதாச — புலிகள் உடன் பாட்டின் மூலம் புலிகள் இந்தியாவின் அனுதாபத்தை முற்றிலுமாக இழந்து போயினர்.

ரணிலை தோற்கடிக்கும் திட்டத்தின் மூலம் மேற்குலகின் அனுதாபத்தை முற்றிலுமாக இழந்து போயினர். இந்த பின்புலத்தில் தான் புலிகள் இயக்கம் முற்றுப் பெற்றது. சொல்ஹெய்ம் ரணில் விக்கிரமசிங்கவிற்கு மட்டும் .ஆலோசகராக நியமிக்கப்படவில்லை. அவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலினால் உருவாக்கப்பட்டுள்ள காலநிலை பேரவைக்கான ஆலோசகராகவும் இருக்கின்றார்.

சொல்ஹெய்மால் எப்படி எதிரும் புதிருமான இரண்டு அரசியல் சூழலில் பணியாற்ற முடிகின்றது. அல்லது எதிரும் புதிருமென்று நாங்கள் தான் தவறாக புரிந்து கொண்டிருக்கின்றோமா அல்லது இராஜதந்திரிகளின் எல்லையை எங்களால் சரியாக புரிந்து கொள்ள முடியவில்லையா? தமிழ்ச் சூழலில், சொல்ஹெய்ம் தொடர்பில் பலவாறான அபிப்பிராயங்கள் உண்டு. அவர் தமிழ் மக்களை காப்பாற்ற முயற்சிக்கவில்லையென்றும் இறுதி யுத்தத்தின் போது நோர்வே காத்திரமான தலையீடுகளைச் செய்யவில்லையென்று கூறுவோர் இப்போதுமுண்டு.

சிங்களவர்கள் மத்தியிலும் சொல்ஹெய்ம் தொடர்பில் மாறுபட்ட அபிப்பிராயங்களுண்டு. சொல்ஹெய்மை புலிகளின் ஆதரவாளரென்று கூறும் சிங்கள கடும்போக்காளர்கள் உண்டு. சொல்ஹெய்ம் போன்ற இராஜ தந்திரிகளின் எல்லையை சரியாக புரிந்து கொண்டால், இவ்வாறான வாதங்களுக்கும் விமர்சனங்களுக்கும் அவசியமிருக்காது. யுத்தத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளும் சுமுகமானதொரு சூழலில் பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு அனுசரணை வழங்குவது மட்டுமே நோர்வேயின் பணியாக இருந்தது. பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பதென்பதை சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளும் பேசித் தான் முடிவு செய்யலாமே தவிர இதில் நோர்வேக்கு எந்தவொரு இடமுமில்லை.

இரண்டு தரப்பும் ,ணங்கியதன் மூலம் தான் நோர்வே, இலங்கையின் சமாதான முன்னெடுப்பிற்கு அனுசரணை வழங்க முடிந்தது. இரண்டு தரப்போ அல்லது ஒரு தரப்போ, எப்போது வேண்டுமானாலும் நோர்வேயின் பங்களிப்பை நிராகரிக்க முடியும். அவ்வாறு நிராகரித்தால் அதன் பின்னர் நோர்வேக்கு எந்தவொரு தெரிவும் இல்லை. உண்மையில் சமாதான ஏற்பாடுகளில் பங்கு கொள்ளும் நோர்வே போன்ற நாடுகளின் நிலைமை பலவீனமானது. இந்த பின்புலத்தில் நோக்கினால், ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்கும் முயற்சியில் விடுதலைப் புலிகள் எப்போது ஈடுபட்டனரோ அப்போதே அனைத்தும் முடிந்து விட்டது. அதன் பின்னர் இடம் பெற்ற எந்தவொரு விடயத்திற்கும் நோர்வேயையோ அல்லது சொல்ஹெய்மையோ குற்றம் சாட்ட முடியாது. ஒருவேளை ரணில் விக்கிரமசிங்கவோடு விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, அப்போது விடயங்களில் தவறுகள் இடம்பெற்று, ஒருவேளை அதனை சரி செய்வதற்கு நோர்வே தவறியிருந்தால், சொல்ஹெய்மின் மீது குற்றஞ் சாட்டுவதில் அர்த்தமிருக்க முடியும். மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் மேடைகளில் ஒரு விடயம் தெளிவாகவே குறிப்பிடப்பட்டது.

அதாவது, சமஷ்டியடிப்படையிலான அரசியல் தீர்வு,சுயநிர்ணயம் எதனையும் தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அதே வேளை ரணில் அரசாங்கம் முன்னெடுத்த விடயங்களை நாம் தொடர மாட்டோம், எமது தலைமையில் சமாதான முன்னெடுப்புகள் புதிதாக முன்னெடுக்கப்படும். இவ்வாறு கூறும் மகிந்த ராஜபக்ஷவின் வெற்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



றியை புலிகள் விரும்பினார்கள் என்றால் அதன் பொருள் என்ன? இதன் பின்னர் நோர்வே தொடர்பில் விவாதிப்பதற்கு என்னவுண்டு? எரிக் மட்டுமல்ல, எந்தவொரு நாட்டின் இராஜதந்திரிகளுமே அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளை மட்டுமே முன்னெடுப்பர். அதுவே அவர்களது கடமையாகும். இந்திய-இலங்கை ஒப்பந்த காலத்தில், இலங்கைக்கான இந்தியத்தூதுவராக இருந்த ஜே.என். டிக்சித் தொடர்பிலும் தமிழ் சூழலில் மட்டு மல்ல தென்னிலங்கையிலும் பலவா றான அப்பிராயங்கள் உண்டு. டிக்சித், இலங்கைக்கான இந்தியாவின் வைஸ் ராய் போன்று செயற்பட்டதாக சிங்களவர்கள் அவரை விமர்சித்ததுண்டு. உண்மையில் டிக்சித்திற்கு என்ன பணிகள் கொடுக்கப்பட்டனவோ, அதனையே அவர் முன்னெடுத்தார். அதேபோன்று சொல்ஹெய்முக்கு என்ன பணிகள் கொடுக்கப்பட்டதோ, அதனையே அவர் முன்னெடுத்தார். சொல்ஹெய்ம்,.லங்கையில் செயற்பட்ட காலத்தில (22ம் பக்கம் பார்க்க)

வீடு காணி விற்பனைக்கு

கரவெட்டி சாமியன்அரசடியில் வீடும் கடைகளும் மற்றும் அச்சுவேலியில் 10.5 பரப்பு காணி – அச்சுவேலி சந்தியில் இருந்து தொண்டமானாறு றோட்டில் நடை தூரத்தில் முன்னர் RiceMill இருந்த இடம் என்பன உடனடியாக விற்பனைக்கு உண்டு.

விலை விபரங்கள் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:- 647 763 1132

# இது நம்ம யாழ்ப்பாணம் 18

# கனகராஜா உருவாக்கிய யாழ்ப்பாணத்து பனைகள்!

யாழ்நகரில் இருந்து ஈழநாட்டிற்காக
- பகிரதன் -

மில்வைற் என்றவுடன் நினைவுக்கு வரும் மற்றொரு விடயம் கனகராஜா முன்னெடுத்த சமூக சேவைகள்தான். மில்க்வைற் யாழ்ப்பாண கைத் தொழில் துறையில் எவ்வாறு ஒரு முன்னோடியாகச் செயற்பட்டது என்பதையிட்டு கடந்த வாரம் பார்த்தோம். இந்த வாரம் அவரது சமூக சேவைகள் குறித்து எமது கவனத்தைச் செலுத்துவோம்.

கனகராஜா முன்னெடுத்த சமூக சேவைத் திட்டங்களில் பனையை வளர்ப்போம் பயனைப் பெறுவோம் என்ற திட்டம் மிகவும் முக்கியமானது. இதன் மூலமாக போர்க் காலத்தில் தமிழ் மக்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டனர் என்பதையிட்டும் இந்த வாரம் பார்ப்போம்.

சுய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் க.கனகராஜாவின் மில்க்வைற் எந்தளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருந்ததோ. அதேயளவுக்கு பனையை வளர்ப்போம் பயனைப் பெறுவோம் என்ற அவரது திட்டமும் அமைந்திருந்தது. கற்பகத் தருவான பனையின் பயன்களை அவர் அறிந்திருந்ததுடன். தமிழ்ப் பகுதிகளின் பொருளாதாரத்தில் அதன் வகி பாகம் முக்கியமானதாக இருக்கும் என்பதையும் உணர்ந்திருந்தார்.

இன்று பொருளாதார நெருக்கடி ஒன்று நாட்டில் உருவாகி, சுயபொருளாதார அபிவிருத்தி குறித்து முக்கியமாகப் பேசப்படுகின்றது. இந்தத் தருணத்தில் பனையின் முக்கியத்துவம், பனைப் பொருளாதாரம் குறித்தெல்லாம் பேசப்படுகின்றது. ஆனால் கனகராஜா இதனை 1970 களிலேயே முன்னெடுத்திருந்தார் என்பது அவரது தீர்க்க தரிசனத்துக்கு எடுத்துக்காட்டு. மில்க்வைற் முன்னெடுத்த சமூக சேவைத்திட்டங்களில் பனை அபிவிருத்தி பிரதானமாக இருந்தது. பனம் விதைகளைச் சேகரிப்பதிலும், அவற்றை மக்களுக்கு விநியோகிப்பது, அதனை நடுவதை ஊக்குவிப்பது என்பவற்றுக்காக கணிசமான நிதியையும், நேரத்தையும் கனகராஜா ஒதுக்கியிருந்தார். இதனை ஊக்குவிக்கும் வகையிலான பிரசுரங்கள் பலவற்றையும் அவர் வெளியிட்டு இலவசமாக மக்களுக்குக் கிடைக்கச் செய்தார்.



பனம் விதைகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வடக்கு கிழக்கில் வீதியோரங்களில் நடப்பட்டன. சதுப்பு நிலங்களில் அவை பெருமளவுக்கு வீசப்பட்டன. அவை இன்று வானுயர வளர்ந்திருப்பதை காண முடிகின்றது. அவற்றின் பயனை இன்றைய சந்ததி ஏதோ ஒரு வகையில் பெற்றுக் கொள்கின்றது.

கனகராஜாவின் காலத்தில் பனை அபிவிருத்திக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத் துவத்தை இன்வரையில், வேறு யாரும் கொடுப்பதாகவும் அறிய முடியவில்லை. அதனை விட கனகராஜாவின் காலத்தில் நடப்பட்ட பனைகளின் முழுமையான பலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான திட்டங்கள் கூட வகுக்கப்படாத ஒரு நிலை இன்றுள்ளது. பனை அபிவிருத்திச் சபை போன்றன செயற்படுகின்ற போதிலும், அதனுடைய பலன்கள் எந்தளவுக்கு மக்களைச் சென்றடைகின்றன என்பது கேள்விக்குறியாகத் தான் உள்ளது.

போர் தீவிரமாக இடம் பெற்ற காலப் பகுதியில் விமானக் குண்டு வீச்சுக்கள், ஆட்டிலறி ஷெல் தாக்குதல்களின் போது மக்களைப் பாதுகாக்கும் கவசங்களாகவும் இந்தப் பனை மரங்கள் தான் இருந்துள்ளன. போர் முடிவுக்கு வந்த காலப்பகுதியில் மொட்டையாக எரிந்த நிலையில் பெருமளவு பனைமரங்களைக் காணக்கூடியதாக இருந்தது.



தனது பொருட்களை உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள் என்று அவர் கூறி விற்பனை செய்தார். மில்க்வைற் விற்பனை மூலமாக கிடைத்த பணத்தில் குறிப்பிட்ட ஒரு தொகையை ஏதோ ஒரு வகையில் சமூக நலத் திட்டங்களாக மக்களுக்கே கிடைக்கச் செய்தார்.

தமிழ் மீது இருந்த தீராத பற்றினால் திருவள்ளுவரின் குறளையோ பாரதியின் பாடல்களையோ பனை ஓலையில் அச்சடித்து தனது சோப்புகளுடன் விநியோகித்திருக்கிறார்.

தனது தயாரிப்புகளையும் அவர் பொதிந்து கொடுக்க களிமண்ணில் செய்த அழகிய பேழைகளில் வைத்து இலவசமாக கொடுத்தார். நூற்பவர்களிடம் இருந்து பெற்ற துணிகளைக் கொண்டு தந்து சோப்பை பொதிந்து விற்பனை செய்திருக்கிறார். இவைகளின் மூலம் அவர் குயவர்களையும், நெசவாளர்களை யும் ஆதரித்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

அரி வரியில் எமது மழலைகள் ஆனா ஆவன்னா எழுதிப் பழகப் பனையோலையில் அரிச்சுவடி செய்து பள்ளிக்கூடங்களுக்கும், கோயில்களுக்கும் அனுப்புவதில் இருந்து ஆத்திசூடி நீதி நூல் வாசகங்கள் கொண்ட ஸ்டிக்கர்களை அச்சிட்டு விநியோகிப்பது என்பனவும் அவரால் முன்னெடுக்கப்பட்ட முக்கிய பணிகள்.

மில்க்வைற் செய்தி என்ற சமூக, சமய, அறிவியல் சார்ந்த பத்திரிகையை வெளியிடுவது என்று மில்க்வைற் கனகராசா அவர்களின் பணி விரிந்தது. அதனால் அவருக்குச் சிவ தர்ம வள்ளல் என்ற பட்டமும் கிட்டியது. அவருக்கு உறுதுணையாக எழுத்து முயற்சிகளுக்குப் பொறுப்பாக அறிஞர் க.சி.குலரத்தினம் விளங்கினார். மில்க்வைற் செய்தியின் ஆசிரியராக அவரே பணியாற்றினார் மில்க்வைற் செய்தி இலவச வெளியீடாக கிரமமமாக வந்து கொண்டிருந்தது.




மில்க்வைற் கனகராஜா செய்த பணிகள் காலத்தில் முக்கியமானவை. அவரளவுக்கு இந்தப் பணியை முன்னெடுக்கக்கூடிய ஒருவர் இன்றில்லை. இன்றைய பொருளாதார நெருக்கடி, சுயதேவைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான தேவை என்பன இவ்வாறான ஒருவரின் தேவையை அழுத்தி உரைப்பதாகவே இருக்கின்றது.

### கனகராஜாவின் வாழ்க்கையை சுருக்கமாகப் பார்த்தல்

1927 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2 ஆம் திகதி கந்தையா வீரகத்தி அவர்களுக்கும் மீனாட்சி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தவர் கனகராஜா. செல்லையா மகள் நாகம்மாவை 1951 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பதினான்காம் திகதி திருமணம் முடித்து இல்வாழ்வில் அடியெடுத்து வைத்தார். அவரது மனைவியும் கனகராஜாவின் சமூகப் பணிகளுக்கு பெரிதும் ஆதரவாக இருந்துள்ளார்.

1952 முதல் மில்க்வைற் சவற்காரக் கம்பெனியின் உரிமையாளர் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார்.Multi Oil Industries Ltd Multi Rice Industries ltd தலைவர் ஆகவும் பணியாற்றிய கனகராஜா. 1974 முதல் சமாதான நீதவனாகவும் இருந்துள்ளார்

சுயதேவைக் கைத் தொழில், பனை வளர்ப்பின் மூலமாக தமிழ் மக்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துதல் என்ற வகையில் கனகராஜாவின் பணிகள் தமிழ் மக்களால் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவை.

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO
SWAMI SARANAM

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8, Tel: 416-321-6104

## ஸ்ரீ ஐயப்ப சுவாமி விசுக்கனி அலங்கார உற்சவமும் ஐயப்பன் விரத மாலை அணிதலும்



**காலம்: 01.04.2023 சனிக்கிழமை முதல் 17.04.2023 திங்கட்கிழமை வரை**

## "ஐயனை நாடுங்கள்! அவன் புகழ் பாடுங்கள்! என்றும் புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்"

ஐயப்பன் மெய்யடியார்களே!

மகர மண்டல விரதத்திற்கு மாலை அணிந்து விரதமிருப்பதைப் போன்று விசுக்கனி தரிசனத்திற்காக மாலை அணிந்து விரதமிருக்கின்ற மரபு ஸ்ரீ ஐயப்பன் வழிபாட்டில் சிறப்பு நடைமுறையாகும்.

01.04.2023 சனிக்கிழமை காலை 7:00 மணிக்கு கணபதி ஹோமத்துடன் விசுக்கனி அலங்கார உற்சவம் ஆரம்பமாகும். 17.04.2023 திங்கட்கிழமை வைரவர் மடை வரை காலை, மாலை சிறப்பு அபிஷேகம், சிறப்பு பூஜை, படிப்பூஜை, வசந்தமண்டப பூஜை, சுவாமி புறப்பாடு என்பன நடைபெற உள்ளதால், அடியார்கள், மாலை அணிந்து விரதமிருக்கும் சுவாமிமார்கள், தினமும் காலை, மாலை திருவிழா உபயம் செய்வோர் ஆலயத்தில் பதிவு செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

## உற்சவ கால நிகழ்ச்சி நிரல்

சிறப்பு அபிஷேகம் காலை 10:00 மணிக்கும், மாலை 6:00 மணிக்கும், காலை பூஜை 11:00 மணிக்கும், மாலை பூஜை 7:30 மணிக்கும், சுவாமி புறப்பாடு மதியம் 12:00 மணிக்கும், மாலை 8:30 மணிக்கும் நடைபெறும்.

## விசுக்கனி ஸ்ரீ ஐயப்பன் விரத மாலையணிதல்

01.04.2023 சனிக்கிழமை காலை 7:00 மணிமுதல் நண்பகல் 12:00 மணி வரை,
மாலை 7:00 மணி முதல் இரவு 8:00 மணிவரை
விசுக்கனிக்காக ஐயப்பன் விரத மாலை அணிந்து கொள்ளும் சுவாமிமார்கள்
ஆலய குருசுவாமி கைகளால் மாலை அணிந்து கொள்ளலாம்.

## நெய் நிரப்புதல் 09.04.2023 ஞாயிற்றுக்கிழமை

09.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி முதல் மதியம் வரை அடியார்கள் உங்கள் வேண்டுதல்களை வேண்டி புனிதமான நெய் தேங்காயில் உங்கள் கைகளால் நெய் நிரப்பி ஸ்ரீ ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

## சுவாமிமார்களின் நெய் அபிஷேகம்

14.04.2023 வெள்ளிக்கிழமை காலை 7:00 மணிக்கு இருமுடி சுமந்து, 18 படிகள் ஏறி சுவாமிமார்களின் நெய் அபிஷேகம் காலை 7:00 முதல் காலை 10:00மணி வரை நடைபெறும். (புதுவருடப்பிறப்புப் பூஜை அதிகாலை 4:33 மணிக்கு நடைபெறும்.)

**இறைபணியிலுள்ள அறங்காவல் சபையினர்**

விசேட நாட்களில் பூஜை நேரங்கள் மாற்றப்படலாம். THE POOJA TIME MAY BE CHANGED ON SPECIAL OCCASIONS.

# எம்.ஜி.ஆர் தொப்பியை வென்ற ஈ.பி.எஸ்

செவ்வாயன்று சென்னை அவ்வை சண்முகம் சாலையில் உள்ள அதிமுகவின் தலைமை அலுவலகம் விழாக் கோலம் பூண்டிருந்தது. கட்சித் தொண்டர்கள் பெருமளவில் கூடி, பட்டாசுகள் வெடித்து, கட்சி நிறுவனரான எம்ஜிஆர் மற்றும் அம்மா ஜெயலலிதாவின் உண்மையான வாரிசு எடப்பாடி கே. பழனிச்சாமி (ஈபிஎஸ்) தான் என்ற கோஷங்களை எழுப்பிக் கொண்டாடினார்கள். ஒரு சிலர் எதிரணித் தலைவரான ஓ. பன்னீர்செல்வம் (ஓபிஎஸ்) ஒழிக என்றும் துரோகி என்றும் கோஷமெழுப்பினர்.

ஈபிஎஸ் அணியினரின் ஆதிக்கம் நிறைந்த, கட்சியின் பொதுக் குழு, பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தலை நடத்தக் கூடாது எனக் கோரிய ஓபிஎஸ்இன் மனுவைத் தள்ளுபடி செய்து, அன்று காலை வெளியாகியிருந்த சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து, ஈபிஎஸ் தொண்டர்களின் இந்தக் கொண்டாட்டங்கள் அரங்கேறின.

இந்த உத்தரவு வெளியான சற்று நேரத்திற்கெல்லாம், சட்டமன்றத்தில் பட்ஜெட் கூட்டத் தொடரில் பங்கெடுத்துக் கொண்டிருந்த அதிமுக உறுப்பினர்கள் அனைவரும், அவையிலிருந்து வெளியேறி, அதிமுக தலைமையகத்துக்கு விரைந்தனர் கட்சியின் பொதுச் செயலாளராக ஒருமனதாக ஈபிஎஸ் அறிவிக்கப்படும் கூட்டத்தில் பங்கேற்க. 1972 ஒக்ரோபர் 17 அன்று எம்ஜிஆர் இக்கட்சியைத் தொடங்கியதிலிருந்து கட்சியின் ஆறாவது பொதுச் செயலாளராக உருவெடுத்திருக்கிறார் ஈபிஎஸ் எம்ஜிஆருக்குப் பிறகு, 'நாவலர்' நெடுஞ்செழியன், ப. உ.ஷண்முகம், ராகவானந்தம் மற்றும் 1989 முதல் 2016 டிசம்பர் 5 அன்று தனது இறுதி மூச்சு வரை தொடர்ந்து 'அம்மா' ஜெயலலிதா ஆகியோர் அப்பொறுப்பை வகித்துள்ளனர். அம்மாவின் உயிரிழப்புக்குப் பிறகு கட்சி நிர்வாகிகள் அவரைக் கட்சியின் நிரந்தரப் பொதுச் செயலாளராக அறிவித்தனர்.

தொடர்ந்த சில மாதங்களில் ஓபிஎஸ், ஈபிஎஸ் ஆகிய இரு முக்கிய தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில், 2,663 பொதுக்குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற அதிமுக உறுப்பினர்களின் பெரும்பான்மையினர் ஆகியோரின் ஆதரவைப் பெற்றார் ஈபிஎஸ். சென்ற ஆண்டு ஜீலை 11 அன்று நடந்த சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தில் ஈபிஎஸ் 'இடைக்கால'ப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'அம்மா' ஜெயலலிதாவை 'நிரந்தர பொதுச் செயலாளர்' என்ற பதவியில் இருந்து அகற்றுவதற்கு முந்திய படியாக இந்தச் செயல் கருதப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளர்களைப் பொதுக் குழுவிலிருந்து நீக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து, அதிமுக தலைமையகத்தில் வன்முறை மோதல்கள் அரங்கேறின. அதையடுத்து, காவல் துறை உதவியுடன் அந்தக் கட்டடத்தை சீல் வைத்து மூடியது திமுக அரசு. தன்னுடையதும் மற்றும் தமது சொந்த தேனி தொகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான தனது மகன் ரவீந்திரநாத் உள்ளிட்ட ஆதரவாளர்களின் நீக்கத்தையும் எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் ஓபிஎஸ். அதே நேரத்தில், முன்னாள் அமைச்சர் உதயகுமாரை சட்டமன்ற



எதிர்க்கட்சித்துணைத் தலைவராகவும் (ஈபிஎஸ் எதிர்க்கட்சித்தலைவர்) அக்ரி கிருஷ்ணமூர்த்தியைக் கட்சியின் துணைச் செயலாளராகவும் நியமித்து, ஓபிஎஸ் ஆதரவாளர்களை ஒதுக்கி வைத்துக் கட்சியின் மீதான தனது பிடியை வலுப்படுத்தினார் ஈபிஎஸ். தமிழக அரசுக்கு அதிமுக தலைமையகக் கட்டடத்தை ஈபிஎஸ் வசம் ஒப்படைக்குமாறு நீதிமன்ற உத்தரவைப் பெறுவதிலும் இவர் வெற்றி பெற்றுள்ளார்.

ஜீலை 20 அன்று இந்த உத்தரவைக் கட்சித் தொண்டர்கள் கொண்டாடினர். அடுத்த சில வாரங்களில், ஓபிஎஸ் தலைமைக்கு ஆதரவாக நீதிமன்றத்தின் ஒரு நபர் அமர்வு அளித்திருந்த உத்தரவைத் தள்ளுபடி செய்தது, உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட இரு நீதிபதி அமர்வு. இந்தியாவில் இந்த ஆண்டு (2023) நடக்கவிருக்கும் ஜி20 உச்சிமாநாட்டுக்குத் தயாராவது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்த மத்திய அரசு, தேசியக் கட்சிகளின் கூட்டத்தைக் கடந்த நவம்பர் டில்லி ராஷ்டிரபதி பவனில் நடத்தியது.

அதில் பங்கேற்க, ஈபிஎஸ்-ஐ அழைத்தது. இந்த அழைப்பை அடுத்து, அவருக்கு மோடி அரசிடம் அங்கீகாரம் கிடைத்ததாக ஈபிஎஸ் ஆதரவாளர்கள் கொண்டாடினார்கள். மறுபுறம், இடைக்காலப் பொதுச் செயலாளராக ஈபிஎஸ் தேர்வானதை எதிர்த்து ஓபிஎஸ் டெல்லியில் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கு தோல்வியடைந்தது. அடிமேல் அடி வாங்கிய ஓபிஎஸ்க்கு கடைசி அடியாகக் கடந்த செவ்வாயன்று ஒரு நீதிமன்றத் தீர்ப்பு வெளியானது.

அதிமுக பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தலை நிறுத்தி வைக்குமாறு ஓபிஎஸ் கோரிய வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. ஈபிஎஸ், எம்ஜிஆர் தொப்பியை அணிந்த கதை இது தான்.

தொடக்கத்தில், குறிப்பாக அம்மாவின் மறைவுக்குப் பிறகு ஓபிஎஸ்க்கு ஆதரவாக இருந்த பாஜகவும் தற்போது ஈபிஎஸ் பக்கம் சாய்ந்து விட்டது. ஓபிஎஸ் அணி தற்போது வெறிச்சோடியிருக்கிறது என்றால் அதற்கு முழுப் பொறுப்பும் அவரே தான். இரு முறை முதல்வர் பதவியை வகித்தவர் அவர் முதலில், 2016-17இல் ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற ஜெயலலிதா முதல்வர் பதவியிலிருந்து விலகியபோதும் பிறகு, அம்மாவின் மறைவுக்குப் பிறகு 'சின்னம்மா' சசிகலா, தான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் வரை பொறுப்பை ஏற்குமாறு இவரைத் தேர்ந்தெடுத்த போதும் அதற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டதையடுத்து தான் முதல்வராக முடியாத நிலையில், தனக்கு எதிராக ஓபிஎஸ் போர்க்கொடி தூக்கியதால் அவரை விலக்கி, ஈபிஎஸ்-ஐ தலைவராக நியமித்தார் சசிகலா. சின்னம்மாவை எதிர்த்து மரினா கடற்கரையில் தர்மயுத்தத்தை நடத்திய ஓபிஎஸ், ஊடகங்கள் மற்றும் மக்கள் மத்தியில் நாயகனாக உருவெடுத்தார், பாஜகவின் ஆதரவும் மறைமுகமாக இருந்தது.

ஆனால் கட்சித் தலைமைப் பதவிக்கான பரபரப்பான போட்டியில் முடிவுகள் எடுப்பதில் காட்டிய மெத்தனப் போக்கால் ஓபிஎஸ் முக்கியத்துவத்தை இழந்தார். மறுபக்கம் ஈபிஎஸ், அதிமுக அரசை மீதமுள்ள நான்கு ஆண்டுகள் வெற்றிகரமாக நிறைவு செய்ததுடன், ஆட்சியில் இருந்த காரணத்தால், கட்சி நிர்வாகிகளின் விருப்பங்களைத் திறம்பட நிர்வகித்து, கட்சியின் மீதான தனது பிடியையும் வலுப்படுத்திக் கொண்டார்.

ஆனால், ஆட்சிக்கு எதிரான மக்களின் பொதுவான மனோபாவமும், ஊழல் விவகாரத்தில் அவரது அரசுக்கு இருந்த கெட்ட பெயரும் ஈபிஎஸ்-க்குப் பின்னடைவைக் கொடுத்தன. மேலும், ஓபிஎஸ்-உடனான இவரது மோதலும் சேர்ந்து, 2021 சட்டமன்றத் தேர்தலில் மு. க.ஸ்டாலினின் திமுகவிடம் ஈபிஎஸ் தோல்வியடையச் செய்தது. அது மட்டுமல்லாமல், தொடர்ந்து வந்த உள்ளாட்சித் தேர்தலிலும் ஈபிஎஸ் தலைமையிலான அதிமுக மோசமான செயல்பாட்டையே வெளிப்படுத்தியது.

இதனால், முக்கிய ஊடகங்களில் கட்சி சிதைந்து விட்டதான பிம்பமே வெளியானது. ஈபிஎஸ் இந்த அரசியல் 20 சூழலில் காணாமல் போய்விட்டதாகவே தோன்றியது. தேவர் சமுதாய வாக்குகளைத் தக்க வைத்துக் கொள்ள, ஓபிஎஸ்-உடனும் சின்னம்மா சசிகலாவுடனும் கூட சமாதானமாகப் போகச் சொன்ன பாஜக-வின் அழுத்தத்துக்கு அடிபணியாமலும் தனது ஆதரவாளர்களைத் தக்க வைத்துக் கொண்டும் தனது சாமர்த்தியத்தை ஈபிஎஸ் நிரூபித்தார்.

வரும் ஆண்டு மே மாதம் நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியைத் தோற்கடிக்கும் நோக்கில், அதிமுகவுடனான கூட்டணியை மேலும் வலுப்படுத்த பாஜக நினைத்தது. ஆனால் ஈபிஎஸ், தமிழகத்தின் 39 மற்றும் புதுச்சேரியில்1 என 40 தொகுதிகளில் கணிசமான வெற்றியைப் பெற்றுத்தர முடியும் என்று பணிவாகவும் அதேநேரத்தில் உறுதியாகவும் பாஜகவுக்கு உறுதியளித்துத் தன்னுடைய முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

பிளவுகளைச் சரி செய்ய அதிமுக எடுக்கும் முயற்சிகள் குறித்து முதல்வர் ஸ்டாலினும் பெரிதாகக் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. தமிழகத்தில் பெரு முதலீடுகளை ஈர்க்கவும் வேலைவாய்ப்பை மேம்படுத்தவும் திமுக அரசு எடுத்து வரும் பெரும் முயற்சிகளால் அடுத்த சில மாதங்களில் மாநிலத்தில் ஒட்டு மொத்த வளர்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும் என்று அமெரிக்கக் கல்வி பெற்ற அவரது நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். ஊழல் குறித்த தொடர் முணுமுணுப்புகள் இருந்தாலும், மக்கள் அது குறித்துப் பெரிதாகக் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. சாமானியர்களின் வாக்குகளைப் பெறப் பணமும் மதுவும் போதும் என்ற நிலை தான் காணப்படுகிறது. அறிவார்ந்த படித்த மக்கள் அலட்சியத்துடன், தங்களது வாக்குகளைச் செலுத்தக் கூட வாக்குச் சாவடிகளுக்கு வருவதில்லை.

அரசியல்வாதிகள் பொதுப்பணத்தைக் கொள்ளையடித்து நிர்வாகச் சீர்கேடுகளில் ஈடுபடுவது குறித்து நாம் ஏன் புலம்பிக்கொண்டேயிருக்கிறோம்? வெறும் குறை கூறுவதைத் தாண்டி, நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் நன்னடத்தைக்காகப் போராடும் அளவுக்கு நமக்கு நேரமோ மனசாட்சியே இல்லாதபோது குறை கூறுவதற்கான தார்மீக உரிமை நமக்கு என்ன இருக்கிறது? படித்த, அறிவார்ந்த நாம், படிப்பறிவில்லாத, தவறாக வழிநடத்தப்படும் பெரும்பான்மையினரின் கையில் ஏன் தேர்தல் முடிவுகளை விட்டு விடுகிறோம்? ஆரோக்கியமான ஜனநாயகம் நிலைக்க முடியாத இந்தப் பரிதாபமான சூழல் தமிழ்நாட்டில் தான் மிகச்சிறந்த கலாசாரத்துக்கும் இலக்கியத்துக்கும் பெயர் போன, தந்தை பெரியாரின் புரட்சிகரமான சீர்திருத்தச் சிந்தனைகளுக்குப் பெயர் போன தமிழ் நாட்டில் தான் நிலவுகிறது.

கல்வியிலும் கலாசாரத்திலும் வலுவான சமூகமான எனது ஈழத் தோழர்கள் மிகவும் மேம்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும். பணத்துக்காகவோ வேறு சில சலுகைகளுக்காகவோ தங்களது வாக்குகளை அவர்கள் விற்க மாட்டார்கள். அடுத்து, எப்போது தேர்தல் நடந்தாலும், வேட்பாளர் களின் தகுதியின் அடிப்படையிலும் அரசியல் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகளின் அடிப்படையிலும் தான் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள்.

ஆனால், 40 ஆண்டுகளாக ஒரு பத்திரிகையாளனாக இலங்கை விவகாரங்களைக் கூர்ந்து கவனித்து வருவதன் அடிப்படையில் உங்களிடையே ஒரு பிரச்சனை இருப்பதையும் நானறிவேன். உங்களில் பலர், அறிவால் வழிநடத்தப்படுவதை விட உள்ளத்தில் பொங்கிவரும் உணர்ச்சிகளால் அதிகம் உந்தப்படுகிறீர்கள். கோபமும் பரஸ்பர அவநம்பிக்கையும் தான் நம் முடிவுகளை நிர்ணயிக்கின்றன. 'நாம்' என்பதை விட 'நான்' என்ற உணர்ச்சி தான் ஆதிக்கம் செலுத்துகிறது. சிங்கள ஆட்சியாளர்கள் மட்டுமன்றி, நிதியுதவிக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் நாம் எதிர்பார்த்து நிற்கும் உலக வல்லரசுகள் மத்தியிலும், மரியாதைக்குரிய, சக்தி வாய்ந்த ஒரு

(22ம் பக்கம் பார்க்க)

# பெருமாளிடம் பிடுங்கிக் கொண்டதா அனுமார்?



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து முதல் தவணையாக கிடைத்த, 330 மில்லியன் டொலரில், 121 மில்லியன் டொலர், அடுத்த நாளே இந்தியாவுக்கு செலுத்தப்பட்டு விட்டது.

அரசாங்கம் இதனை அறிவித்த போது நாட்டு மக்களுக்கு ஆச்சரியமே மிஞ்சியது. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து வாங்கிய கடனை, அரசாங்கம் மீண்டும் கடனை அடைப்பதற்கே பயன் படுத்தியிருக்கிறது. இதன் மூலம் பொருளாதாரத்தை எப்படி மீட்டெடுக்கப் போகிறது என்ற கேள்வி முதன்மை பெற்றிருக்கிறது.

அதை விட அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகளிடம், கடன் மறுசீரமைப்பு உத்தரவாதத்தை பெற்றுக் கொண்ட பின்னர் தான், இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் கடனை வழங்கியது. கடன் மறுசீரமைப்பு என்னும் போது, வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை நீடிப்பது மற்றும், அந்தக் கடனுக்கான வட்டியை தள்ளுபடி செய்வதை உள்ளடக்கியதாகும்.

இவ்வாறான கடன் மறுசீரமைப்பு உத்தரவாதத்தை இந்தியாவும் வழங்கியது. அவ்வாறிருக்கையில், சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெற்றதும், அதனை இந்தியா பறித்துக் கொண்டது, பிச்சை எடுத்த பெருமாளிடம், அனுமார் பிடுங்கிக் கொண்டதாக இருக்காதா என்ற கேள்வியும் எழுகிறது. தங்களைப் போலவே சீனாவும் கடன் மறுசீரமைப்பு உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என்று அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் ஒற்றைக்காலில் நின்றமை மறக்க முடியாது. அதுபோல, சர்வதேச நாணய நிதியமும், இந்த விடயத்தில் சீனா இறங்கி வர வேண்டும் என்று அழுங்குப் பிடியில் இருந்ததையும் மறுக்க முடியாது.

இவ்வாறிருக்கையில் கடன் மறுசீரமைப்புக்கு இந்தியா முழுமையாக இணங்கியிருந்தால், சர்வதேச நாணய நிதியம் வழங்கிய கடனில் மூன்றில் ஒரு பங்கை, அவசரமாக இந்தியா திரும்ப பெற்றுக் கொண்டிருக்காது. உள்ளூராட்சித் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபாவை, ஒதுக்கிக் கொடுக்க முடியாத நிலையில் தான் இலங்கையின் பொருளாதாரம் உள்ளது.

இவ்வாறான நிலையில், இந்தியாவின் கடனை அடைக்க முதற்கட்ட தவணைக் கொடுப்பனவாக, 121 மில்லியன் டொலரைக் கொடுத்திருக்கிறது இலங்கை. அவ்வாறாயின், இலங்கைக்கு வழங்கிய கடனை குறிப்பிட்ட காலத்துக்கு மீள வசூலித்துக் கொள்ளாமல் இருப்பதற்கு இந்தியா இணங்கவில்லை என்பது உறுதியாகியிருக்கிறது.

கடந்த ஆண்டு இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கிய போது, 4 பில்லியன் டொலரை கடனாக வழங்கியது இந்தியா. வேறெந்த நாடும் நிதியுதவி வழங்கத் தயங்கிய போதும், இந்தியா மட்டும், உதவியது என்பதை மறுக்க முடியாது.

எனினும், சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தடவை கடன் கிடைத்ததும், இந்தியா தனக்குச் செலுத்த வேண்டிய தொகையை வசூலித்துக் கொண்டிருப்பது ஆச்சரியம்.

ஏனென்றால், சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி பெற்றுக் கொள்ளப்பட்டால் அது மத்திய வங்கியின் கையிருப்பில் வைக்கப்படுவதே வழக்கம்.

அதற்கு மாறாக, இம்முறை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கடன் தொகை இந்தியாவுக்கு மீளச் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கு முதல் தவணையாக 121 மில்லியன் டொலர் செலுத்தப்பட்டதை நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நியாயப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார். சர்வதேச நாணய நிதியத்தின் கடனை, விசேட தேவைகளுக்காக பயன்படுத்த முடியும் என்று தெரிவித்துள்ள அவர், இவ்வாறு கடன் மீள செலுத்தப்பட்டுள்ளமையானது, கடன் உறுதித் தன்மையை பேணுவதற்கு உதவும் என்றும், எமக்கு உதவிய நாடுகளின் நம்பிக்கையை காப்பாற்றுவதில் சாதகமான தாக்கத்தை செலுத்தும் என்றும் கூறியிருக்கிறார்.

கடன் உறுதித் தன்மையை பேணுவது என்பதும், கடன் வழங்கிய நாடுகளின் நம்பிக்கையை பாதுகாப்பது என்பதும் இப்போது இலங்கைக்கு முக்கியமானது.

அதாவது, இலங்கை அரசாங்கம் கடந்த ஆண்டு வங்குரோத்து நிலையை அடைந் ததாக அறிவித்த பின்னர், கொடுத்த கடன் திரும்பக் கிடைக்குமா என்ற கேள்வி, கடன் கொடுத்த நாடுகளுக்கும், முதலீட்டாளர்களுக்கும் இருந்து வந்தது. அந்த நம்பிக்கையீனத்தை சந்தேகத்தை போக்க வேண்டியது முதல் பிரச்சினை, கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டால் தான் மீண்டும் கடனை வாங்க முடியும். அரசாங்கத்துக்கு ஏற்கனவே 52 பில்லியன் டொலர் கடன் உள்ளது. அத்துடன் சர்வ தேச நாணய நிதியத்திடம் இருந்து எட்டுத் தவணைகளாக கிடைக்கப் போகின்ற 2.9 பில்லியன் டொலரும் ஒரு கடன் தான்.

இதனை வைத்துக் கொண்டு, 52 பில்லியன் டொலர் கடனை அடைக்கவும் முடியாது. நாட்டை கொண்டு நடத்தவும் முடியாது. எனவே, இப்போது அரசாங்கம் கடனை முழுமையாக இல்லாவிட்டாலும் பகுதியளவில் திருப்பிச் செலுத்தும் திறனை அடைந்து விட்டதாக காட்ட வேண்டும்.

அதற்குப் பின்னர் சர்வதேச நாடுகள், நிதி நிறுவனங்களிடம் இருந்து கடனை பெற வேண்டும். சர்வதேச நாணய நிதியம் 7 பில்லியன் டொலர் வரை கடன் பெறுவதற்கும் அனுமதி வழங்கியிருக்கிறது. இது கிடைத்தால் தான், அரசாங்கத்தின் நிதிச் சுற்றோட்டம் சீராகும். அதனை வைத்துக் கொண்டு தான் நாட்டை இயக்கவும், படிப்படியாக கடனை அடைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் முடியும்.

இதன் அடிப்படையில் தான், சர்வதேச நாடுகள், நிறுவனங்களுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடிய ஒரு நகர்வாக, இந்தியாவிடம் பெற்ற கடனுக்காக 121 மில்லியன் டொலரை செலுத்தியிருக்கிறது மத்திய வங்கி. சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பார்களே அது போலத் தான் இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம் கொடுத்த 333 மில்லியன் டொலரில், 121 மில்லியன் டொலரை இந்தியாவிடம் பெற்ற கடனை அடைக்கப் பயன்படுத்தியிருக்கிறது.

இந்தியாவிடம் இருந்து மேலும் பெரியதொரு நாணய மாற்றுக் கடனைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதனை முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி உறுதி செய்திருக்கிறார். பெறப்படவுள்ள கடன் தொகை ,ன்னமும் தீர்மானிக்கப்படாவிட்டாலும், அது சுமார் ஒரு பில்லியன் டொலர் வரை இருக்கலாம் என்று அவர் கூறியுள்ளார்.

இது டொலரில் பெறப்படாது, இந்திய ரூபாவில் தான் கிடைக்கவுள்ளது. இதனை இந்தியாவுடனான வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே இந்திய ரூபாவில் வர்த்தகம் செய்வதற்கு இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு இந்தியா அனுமதி அளித்திருக்கிறது. எனவே, இறக்குமதி தேவைகளுக்கு இந்திய டொலரை திருப்பிச் செலுத்தியிருக்கிறது.

இறால் போட்டு சுறா பிடிக்கும் தந்திரம் என்றும் இதனைக் கூறலாம். இந்தியாவின் இந்த கடன் கிடைத்து விட்டால், இலங்கைக்கு இரட்டிப்பு, அங்கீகாரம் கிடைக்கும். ஒன்று, கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனை அடைந்து விட்டது

இலங்கை என்ற நிலை உருவாகும். ,ரண்டு, கடனை பெறும் தகுதியை கொண்டிருக்கிறது என்ற நிலையும் ஏற்படும். சர்வதேச நாணய நிதியத்திடம் பெற்ற கடனில், கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கை இந்தியா பெற்றுக்கொள்கிறதே, அதற்கு மனச்சாட்சி இல்லையா என்று கேள்வி எழுப்புபவர்கள், அதற்குப் பின்னால் உள்ள சூட்சுமங்களை இப்போது புரிந்து கொள்ள முடியும்.

சிவமயம்




ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)


ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

EELANADU 07 April 2023 ஈழநாடு


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! பகை விலகி எதிலும் வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் எதையும் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எண்ணப்படி எல்லாம் நடக்கும்.குடும்பத்தில் இருந்த மன வருத்தங்கள் மாறி சுமூகமான நிலை உண்டாகும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும்.



ரிஷபராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். மற்றவர்களிடம் உங்கள் கருத்துக்களை கூறும் போது அவர்கள் தவறாக அதை புரிந்து கொள்ளலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி அகலும். கூட்டு தொழில் வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நன்மை தரும். உத்தியோகத்தில் வீண் அலைச்சலை சந்திக்க நேரும். மேலதிகாரிகள் கூறுவதை கேட்டு அதன்படி நடப்பது நல்லது.




மிதுனராசி அன்பர்களே! எந்த ஒரு வேலையை செய்து முடிப்பதிலும் இருந்த தடை தாமதம் நீங்கும். வீண் விவகாரங்களில் தலையிடுவதையும் மற்றவர்களுக்காக வாதாடுவதையும் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் புதிய ஆர்டர்கள் பெறுவதில் இருந்த தாமதம் நீங்கும். வரவு இருந்த போதிலும் வியாபாரம் தொடர்பாக திடீர் முதலீடு செலவு உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் இருப்பது நல்லது.



கடகராசி அன்பர்களே! முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்னைகள் அகலும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம். உழைப்பு அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்களின் வீண் பேச்சால் மனவருத்தம் உண்டாகலாம்.



சிம்மராசி அன்பர்களே! திட்டமிட்டு செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக எதையும் செய்வது நல்லது. அனைத்து தடைகளும் அகலும். தொழில், வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகலாம். பணியாளர்கள் செயல்கள் உங்களுக்கு கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிக நேரம் வேலை பார்க்க வேண்டும்.



கன்னிராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். சுதந்திர எண்ணம் உண்டாகும். சின்ன சின்ன விஷயங்களில் கூட மனநிறைவு ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் வியாபாரம் தொடர்பாக பயணம் செல்ல நேரிடலாம். போட்டிகள் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். மேலிடத்திடம் நல்ல அணுகுமுறை நீட்டிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்




துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியம் தாமதப்படுகிறதே என்ற கவலை நீங்கும். இரவில் நீண்ட நேரம் கண் விழிக்க வேண்டி வரலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் எப்போதும் பிசியாக காணப்படுவர். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றத்தை ஏற்படுத்தும். கடன் விவகாரங்களிலும், கொடுக்கல் வாங்கலிலும் எச்சரிக்கை தேவை. பொறுப்புகள் கூடும். குடும்பத்தினரால் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். வாழ்க்கை துணையின் உடல் நிலையில் நீடித்து வந்த ஆரோக்கிய குறைபாடு பூர்த்தியாகும்.




விருச்சிகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் தீரும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி காண்பீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வீடு மனை ஆகியவற்றை வாங்குவதற்கு இருந்து வந்த தடைகள் நீங்கும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு லாபம் தராவிட்டாலும் வருமானத்திற்கு குறைவு இருக்காது. உத்தியோகத்தில் பணியில் கவனம் செலுத்துவது நல்லது







தனுசுராசி அன்பர்களே! எந்த விஷயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வீண் குற்றச்சாட்டிற்கு ஆளாகலாம். உத்யோகஸ்தர்கள் பயணங்கள் செல்லும் போதும், வாகனங்களில் செல்லும் போதும் கவனம் தேவை. வேலை செய்யும் இடத்தில் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் நிதானமாக செல்வது நன்மை தரும். குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் திடீர் பிரச்னைகள் தோன்றலாம்



மகரராசி அன்பர்களே! எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகளில் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஊழியர்களால் நன்மை உண்டாகும். துணிச்சலாக முயற்சிகள் மேற் கொண்டு வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளால் நன்மை ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும்.



கும்பராசி அன்பர்களே! சின்ன விஷயங்களால் மன நிறைவு உண்டாகும். மற்றவர்களால் அமைதியின்மை உண்டாகலாம். அடுத்தவர் பேச்சை கேட்பதை குறைப்பது நல்லது. எந்த செயலையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை பார்க்கும் இடத்தில் கவனமுடன் பழகுவது நல்லது.



மீனராசி அன்பர்களே! கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் காரியங்கள் சாதகமாக நடைபெறும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலையில் டென்ஷனும், வீண் அலைச்சலும் இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமதம் ஏற்படலாம். கடன் விஷயங்களை தள்ளிபோடுவது நல்லது. புதிய நபர்களுடன் கவனம் தேவை. எதைப் பேசுவதாக இருந்தாலும் பேச்சில் நிதானம் தேவை.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# எம்.ஜி.ஆர் தொப்பியை வென்ற ஈ.பி.எஸ்

(20ம் பக்கத் தொடர்ச்சி) தமிழ்ச் சமூகமாக நம்மை உடனடியாக வெளிக்காட்டிக் கொள்ள, இந்த சமூக அவலம் சரிசெய்து கொள்ளப்பட வேண்டியது அவசரமான அவசியம். பிளவுபட்ட சமுதாயம், வெளியாட்களின் ஆதிக்கத்துக்கு எளிதில் உட்பட்டு விடும் என்பது நமக்குத் தெரிந்ததே.

ஈழ அரசியல் தலைவர்கள், சமூகத்தின் கற்றறிந்த அறிவார்ந்த பிரிவினர் மற்றும் கருத்துருவாக்கம் செய்யும் பிற அங்கத்தினர்கள் மனங்களில் எனது இந்தக்கூக்குரல் ஒரு மாறுதலை ஏற்படுத்துமேயானால், நிச்சயமாக, ஒருங்கிணைந்த ஒரு தமிழ்ச் சமூகமாக நாம் வலுப்பெறுவது மட்டுமல்லாமல், நீண்ட காலமாக வன்முறை நிறைந்த பிரிவினைகளாலும் பொருளாதார நெருக்கடியாலும் பாதிக்கப்பட்ட ஒரு நாட்டில் மீண்டும் அமைதியையும் பொருளாதார வளர்ச்சியையும் கட்டமைக்கவும் நம்மால் முடியும்.

இந்த ஈழநாடு கட்டுரைகளில் நான் கனவு கண்டு வரும் வசந்தகாலம், நமது உறுதியான மனவலிமையாலும் தொடர் முயற்சிகளாலும் கோணேஸ்வரர், திருக்கேதீஸ்வரர் மற்றும் நல்லை கந்தன் அருளாலும் நனவானால், இரவின் இருளில் இரகசியமாக அகதிகள் படகுகள் புறப்படும் நிலை மாறி, அயல்நாடுகளில் குடியேறியுள்ள நமது சுற்றத்தினரும் மீண்டும் தாய் நாடு வர விரும்பும் நிலை உருவாகும் மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# வள்ளுவரில் இருந்து வெடுக்குநாறி மலைக்கு!

(15ம் பக்கத் தொடர்ச்சி) அதைக் குறித்து கருத்து தெரிவிக்கத் தயங்குகின்றன. இந்த விடயத்தில் தலையிடத்தக்க வல்லமையோடு சிவில் சமூகங்களும் இல்லை. இப்படிப்பட்டதோர் அரசியல் சமூக ஆன்மீக வெற்றிடத்தில் நேச முரண்பாடு எது? பகை முரண்பாடு எது? என்ற வேறுபாடு தெரியாமல் தமிழ்ச்சமூகம் ஆளையாள் கடித்துக் குதறிக் கொண்டிருக்க,

அனாவசியமான விடயங்களில் சக்தியை வீணாக்கிக் கொண்டிருக்க சிங்கள பௌத்த மயமாக்கல் புதிய வேகத்தில் முன்னெடுக்கப்படுகிறது. கிண்ணியா வெந்நீரூற்றில், மயிலத்தமடு மாதவனையில்,குருந்தூர் மலையில்,நெடுந்தீவில்,கச்சதீவில் என்று பரவலாகத் சிங்கள பௌத்த மயமாக்கல் நடந்து கொண்டிருக்கிறது. இதில் ஆகப்பிந்திய வெடுக்குநாறி மலை விவகாரம்.அது தமிழ் மக்களைத் தற்காலிகமாகவேனும் ஒரு புள்ளியில் ஒன்றிணைத்திருக்கிறது என்பது சற்று ஆறுதலான விடயம்.

ஒரு தீமைக்குள் கிடைத்த நன்மையது. கடந்த வாரம் திருவள்ளுவருக்குத் திருநீறு பூசலாமா இல்லையா என்ற விவகாரத்தில் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த ஒரு சமூகம் இப்பொழுது வெடுக்குநாறி மலையை நோக்கித் திரும்பியுள்ளதா?

# இராஜதந்திரிகளின் எல்லையைப் புரிந்து கொள்ளுதல்

(17ம் பக்கத் தொடர்ச்சி)' பலருடனும் நல்ல தொடர்பிலிருந்தார்.சிங்களவர்கள் மத்தியிலும் தமிழர்கள் மத்தியிலும் அவருக்கு நண்பர்கள் ஏராளம். புலம்பெயர் சூழலில் ஒரு சிலர், அவர் தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன் வைத்தாலும் கூட, கணிசமானவர்கள் அவருடன் நட்பிலிருக்கின்றனர். அவருடன் கலந்துரையாடுகின்றனர். அவரும் சளைக்காமல் அனைவருடனுமே தொடர்புகளைப் பேணி வருகின்றார்.

சமாதான உடன்பாட்டு காலத்தில் சொல்ஹெய்ம், புலிகளின் தத்துவ ஆசிரியராக அறி யப்பட்ட அன்ரன் பாலசிங்கத்துடன் நெருக்கமான தொடர்பிலிருந்தார். புலிகள் அமைப்பை பொறுத்தவரையில் மேற்குலக இராஜதந்திரிகளோடு தொடர்புகளை பேணிக் கொள்ளக் கூடிய ஒருவராக பாலசிங்கம் மட்டுமேயிருந்தார். அதன் மூலம் அவர்களது பார்வைகளை பாலசிங்கத்தினால் புரிந்து கொள்ள முடிந்தது.

அரசியலில் இயங்குபவர்களுக்கு பரந்தளவிலான இராஜதந்திர தொடர்புகள் அவசியம். இன்றைய சூழலில் சுமந்திரன் அதனை முடிந்தவரையில் பேணுவதாகவே தெரிகின்றது. தனிப்பட்ட உறவுகள் முக்கியமானது. மற்றவர்களை குற்றஞ் சாட்டிக் கொண்டிருப்பதால் எதனையும் நம்மால் அடைய முடியாது. நமது அரசியல் சூழலில் இயங்குவோர் இதனை தெளிவாக புரிந்து கொள்ளல் அவசியமாகும்.

சூழ்நிலையை கையாளுவது நம்முடைய பொறுப்பேயன்றி, அது மற்றவர்களுடையதல்ல. இன்றைய சூழலில் சொல்ஹெய்ம் போன்ற ஒருவரிடமிருந்து எவ்வாறான நன்மைகளை பெற முடியுமோ அதனைப் பற்றி மட்டுமே நாம் சிந்திக்க வேண்டும்.

ஒரு ஆபிரிக்க பழமொழியுண்டு. அதாவது, வானத்தைப் பார்த்து உமிழ்ந்தால், உங்கள் முகமே அசிங்கமாகும். நம்மில் பலர் அதனைத் தான் இராஜதந்திரமென்று எண்ணிக் கொண்டு. தங்களைத் தாங்களே அசிங்கப்படுத்திக் கொள்கின்றனர். இராஜந்திரிகளை குற்றஞ் சாட்டுவதை விடுத்து, அவர்களுடனான தனிப்பட்ட உறவுகளை பலப்படுத்தி அவர்களிடமிருந்து ஏதேனும் நன்மைகளை பெற முடியுமென்றால், அதற்கு முயற்சிப்பதே நமது மக்களுக்கு நன்மையானது. இதனை எல்லோராலும் செய்துவிட முடியாது. செய்யக் கூடியவர்களை ஊக்குவிப்பது தான், மற்றவர்கள் செய்யக் கூடியது.

# ஈழத்தமிழரது மிதவாத அரசியல் கையறு நிலையை நோக்கி நகர்கிறதா?

(9ம் பக்கத் தொடர்ச்சி) மக்கள் விலக்கிக் கொள்ள வேண்டும். அதற்கான புரிதலும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படவேண்டும்.

எனவே ஈழத்தமிழரது அசியல் முழுமையாக சூறையாடப்படும் நிலை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதற்கான எண்ணங்கள் நல்லாட்சிக் காலத்தில் புறந்தள்ளப்பட்டது போல் புறந்தள்ளப்படுமாயின் ஒட்டுமொத்தமாக தேசிய அடையாளம் காணாமல் போக வாய்ப்புள்ளது. அப்போது திருவள்ளுவரையும் நடராசர் சிலையையும் பற்றிய அரசியலை வளர்த்து அகமுரண்பாடுகளை உருவாக்கி கிறிஸ்தவனா? சைவனா? இந்துவா? சிறந்தவனென மேடை போட்டு விவாதம் செய்து காலத்தை கழிக்கலாம் அல்லது வயிற்றுப் பிளைப்பை தேடும் நிலையை உருவாக்கலாம் அல்லது மீண்டுமொரு சங்கிலிய மன்னனை தோற்றுவிக்கலாம். வரலாறு எப்போதும் பழைய கதைகளை பேசுவதல்ல. வரலாறு என்பது கடந்த காலத்திலுள்ளவற்றை தெரிந்து கொள்வதுடன், நிகழ்காலத்தை அளவீடு செய்து கொண்டு எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதாகும். செயல்களிலிருந்தும் விளைவுகளிலிருந்தும் கட்டப்படுவதே வரலாறு. வரலாற்றுத் தவறுகளை திருத்திக் கொள்வதே மனித நாகரிகத்தின் வளர்ச்சி.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),**
**Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

TAX CENTRIC
Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A, MISSISSAUGA, ON L5B 1N1
உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
Tel: 289.569.0169
Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph
- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*

RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599* FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும் சுயதொழில் செய்வோருக்கும் மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.